

# விஜயலக்ஷ்மி பண்டிட்

# விஜயலக்ஷ்மி பண்டிட்

(வாழ்க்கை வரலாறு)

ஆசிரியர் :

வல்லிக்கண்ணன்

வெளியீடு

கலைமன்றம்

131. பிராட்வே

சென்னை-1.

முதற் பதிப்பு
மார்ச் 1954

விலை 1 - 0 - 0

விற்பனை உரிமை
நேரு புத்தகசாலை
125. செட்டியார் தெரு,
கொழும்பு,

# முன்னுரை

உலகத்தில் பெண்களில் முன்னணியில் நிற்கும் மாதரசிகளின் பெயர்களைத் தேர்ந்தெடுக்கும் முயற்சி ஒன்று அண்மையில் அமெரிக்காவில் நிகழ்ந்தது. பணமோகமும். விளம்பரப் பித்தும், ஆடம்பர விருப்பமும் நிறைந்து விளங்கும் உல்லாசிகள் மேனு மினுக்கிகளுக்கு முதலிடம் கொடுக்கவில்லை; ஆடைகளை உதிர்த்துவிட்டு உடல் வெளிச்சம் போட்டு ஆடிமயக்கும் சினிமா நட்சத்திரங்களின் பெயரைக் குறிப்பிடவில்லை; சிங்காரச் சிமாட்டிகளின் பட்டியல் தயாரிக்கவில்லை. ஸ்ரீமதி எலினுர் ரூஸ்வெல்டுக்கு முதல் ஸ்தானமும், ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டுக்கு இண்டாவது இடமும் அளிக்கப்பட்டிருந்தது அவர்கள் தேர்ந்து கொடுத்த பெயர்ப் பட்டியலிலே.

இதிலிருந்தே விஜயலக்ஷ்மி பெற்றுள்ள செல்வாக்கின், கௌரவத்தின், தன்மை நன்கு புரியும். 'மனிதரில் மாணிக்கம்' எனப் புகழப்படும் ஜவாஹர்லால் நேருவின் தங்கை மாதர்களில் மணி என்பதில் சந்தேகமில்லை. அவளது வாழ்க்கை வரலாறு நேருவின் குடும்பக் கதையோடு இழைந்து கிடப்பது. நேரு குடும்பக் கதையோ இந்திய சரித்திரத்தோடு பின்னி வளர்ந்தது. 'நம் நேரு' வாழ்க்கை வரலாற்றை அழகிய முறையில் வெளியிட்ட 'கலா மன்ற'த்தார் விஜயலக்ஷ்மியின் வரலாற்று நூலையும் வசீகரமாகப் பிரசுரிக்க முன் வந்தது பொருத்த

மான செயல் மட்டுமல்ல; போற்றத் தகுந்த காரியமும் ஆகும். அவர்களுக்கு என் வாழ்த்தும் வணக்கமும் உரியன.

இப்புத்தகத்தில் விஜயலக்ஷ்மி முதலியவர்களை 'அள்' விகுதியிட்டே குறித்திருக்கிறேன். பெண்ணை 'அவள்' என்பது கௌரவக் குறைவாகாது. 'அர்' விகுதி போட்டுப் பேசி விடுவதால் மட்டுமே பெண்களைக் கௌரவித்ததாகி விடாது. கவி பாரதியார் கருத்தும் இதுதான். அன்னி பெசண்டை 'அவள்' என்றே குறிப்பிட்டு வந்தார் அவர். ஒரு சமயம் யாரோ அதை ஆட்சேபித்து 'அவள்—இவள்' என்று சொல்லக் கூடாது என்று குறிப்பிடவும், பாரதியார் வெகுண்டார். உணர்ச்சியோடு 'அன்னிபெசண்ட்—அவள், அவள், அவள் தான். பெண்ணை அவள் என்றே சொல்வோம்' என்றார்.

பாரதி வரலாற்றில் காணப்படும் இந்தச் சம்பவத்தையே, இப்புத்தகத்தில் காணும் பிரயோகத்தை ஆட்சேபிக்கக் கூடியவர்களுக்கு, நான் நினைவுபடுத்த விரும்புவேன்.

சென்னை
16, மார்ச் 1954

வல்லிக்கண்ணன்.

# விஜயலக்ஷ்மி பண்டிட்

## அத்தியாயம்-1.

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம்" எனும் உண்மை உலகெலாம் ஒளிவீசி ஓங்கி நிற்கும் காலம் இது. ஆண்களைப் போல் பெண்களும் அரும் பெரும் செயல்கள் புரிந்து இணையற்று விளங்கினார்கள் அந்தக் காலத்திலே. இதற்குச் சரித்திரத்தில் எவ்வளவோ சான்றுகள் உண்டு. இலக்கியத்திலே எத்தனை எத்தனையோ எடுத்துக்காட்டுகள் உள.

ஆனால், இடைக்காலத்தில் பெண்கள் தன்மான உணர்வு இழந்து, உரிமை இழந்து, ஆணினத்தின் அடிமையராய், அடுப்பங்கரைப் பூச்சிகளாய், படுக்கை அறைப் பாவைகளாய், மந்தமதியினராய், கண்ணீர் சிந்தும் சிலைகளாய், பிள்ளை உற்பத்தி இயந்திரங்களாய் ஒடுங்கிக் கிடந்தார்கள். ஒடுக்கப்பட்டுக் கிடந்தார்கள்.

கால தேவனின் கையசைப்பினால் உலகம் எவ்வளவோ மாற்றங்களைப் பெற்றது. நாடுகள் தோறும் மக்கள் உரிமை உணர்வு பெற்று உரிய போராட்டங்களிலே ஈடுபட்டார்கள். பெண் உலகமும் விழிப்புற்றது;

பொங்கி எழுந்தது. உலகில் பல நாடுகளிலும் பெண் களின் உரிமைக்குரல் ஒலிக்கத் தொடங்கியது. பெண் களின் முன்னேற்றம் பற்றிப் பேசப்பட்டது. எல்லாம் வெறும் பேச்சு அளவில் நின்று விடாமல் செயல்களாக வும் மலர்ச்சி உற்றன.

படித்துப் பட்டங்கள் பெற்றார்கள் பெண்கள், சட்டங்கள் செய்யவும், நீதி வழங்கவும் முன் வந்தார் கள். அன்புப்பணி புரியவும், அசகாய சாதனைகள் செய்யவும் களத்திலே புகுந்தார்கள். விமானம் ஓட்டத் துணிந்தார்கள். படைகளிலே இடம் பெற்றார்கள். அறி வுத் துறையிலும் ஆராய்ச்சி அறைகளிலும் தலை நிமிர்ந்து நின்று, அரியபெரிய செயல்களின் மூலம் தம் திறமையை உலகுக்கு உணர்த்தினார்கள். உணர்த்தி வருகிறார்கள்.

இந்தியாவிலும் இந்த விழிப்பு பரவாமல் இல்லை. சற்றுத் தாமதமாக ஏற்பட்டது இந்த உணர்வு. ஆனா லும் வெகு வேகமாக வளர்ந்து விட்டது.

இந்தியா என்றுமே பெண்களுக்கு உயர்வு அளித் துப் போற்றி வந்த நாடுதான். வேதங்கள், இதிகாசங் கள், சரித்திரம், இலக்கியம் எல்லாம் பாரதப் பண்பாடு பற்றி, பெண்கள் பெற்றிருந்த உயர்ந்த நிலைமை பற்றி எவ்வளவோ பேசுகின்றன. எனினும், இடைக்காலத் திலே பெண்கள் அடிமைநிலை எய்த நேர்ந்ததை அவை தடுத்துவிடவில்லை. உலகெங்கும் எழுந்த உத்வேகம் இந்தியப் பெண்களுக்கும் ஊக்கமும் உணர்வும் கொடுக் கத் தவறவில்லை.

இந்தியாவிலே பிரகாசிக்கத் துணிந்த புதுமைப் பெண்களுக்குத் தனியான வாய்ப்புகளும் சிறப்புகளும் எதிர்ப்பட்டன. அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியா சுதந் திரதாகத்தோடு வீறுகொண்டு எழுந்து நின்றது. அந்நிய ஆட்சியோடு சமரிட்டது. வெற்றி காணப் போராடிப் போராடி இன்னல்களை ஏற்க நேர்ந்தது. நாட்டிலே எவ்வளவோ மாறுதல்கள். சமூகத்திலே, குடும்பங் களில், தனி மனித வாழ்வில், எத்தனை எத்தனையோ மாற்றங்கள். அவற்றை எல்லாம் ஏற்று, சகித்து, அற் புத அனுபவங்கள் பெற்று, ஓங்கி உயர்ந்து, கௌரவங் கள் பல அடையும் பாக்கியம் இந்தியப் பெண்களில் பலருக்குக் கிட்டியது.

அத்தகைய பாக்கியம் பெற்ற பெண்களில் ஒரு பெண் **ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்**. அவர்கள் எல்லோ ரையும் விடத் தனி மாண்பு பெற்றுத் திகழும் மாதர் திலகம் அவள். புதுமைப் பெண்களுக்குப் பெருமை தரும் பெண்கள் நாயகம் அவள். அவர்களுடைய போற்றுதலுக்கு உரிய பெண்ணின் பெருமாள் அவள், இந்தியாவின் மதிப்பை உலகுக்கு உணர்த்திவரும் மணி அவள்.

நாட்டுக்காக மகத்தான தியாகங்கள் புரிந்த பண்டித மோதிலால் நேருவின் அருமை மகள் விஜய லக்ஷ்மி. இந்தியாவின் தவப் புதல்வர் ஜவாஹர்லால் நேரு வின் தங்கை அவள். இவ்விரண்டு சிறப்புகளால் மட்டுமே அவள் பெருமை அடையவில்லை. மாண்புக்கு மாண்பு அளிக்கும் நற்சிறப்புகள் பலவும் விஜயலக்ஷ்மி பெற்றிருக்கிறாள். அவற்றின் துணையாலும், நாட்டின்

உயர்வுக்காக ஆற்றிய பணிகளாலும், அப்போது எதிர்ப்பட்ட துன்பங்களும், வேதனைகளும் தந்த அனுபவங்களாலும் நன் மதிப்பைப் பரிசாகப் பெற்றவள் அவள்.

சுதந்திர இந்தியாவின் சக்தியை உலகுக்கு நிரூபிப்பதற்காகப் பாடுபட்டு வரும் ஜவாஹர்லால் நேருவுக்குச் சரியான தங்கை தான் என்பதை நிலைநாட்டி விட்டாள் விஜயலக்ஷ்மி.

"நீ அரசியல்வாதியாக மாறியிருப்பதை உணர்ந்தேன். நீ பெண்ணாகப் பிறந்துவிட்டது அதற்குத் தடையாக இருக்குமோ என்று எண்ண வேண்டாம். தங்கள் நாட்டின் முன்னேற்றத்துக்காக, ஆண்கள் சாதித்துள்ள செயல்களைப் போலவே, எத்தனையோ பெண்களும் தீவிரப் பங்கு ஏற்று அரிய பெரிய சாதனைகளை நிறைவேற்றியுள்ளனர். ஒரு சிலர் ஆண்களை விட அதிகமாகச் சிறந்து விளங்குவதையும் காணலாம். இதெல்லாம் நாட்டின் மீது நாம் கொள்ளுகிற பற்றுதல், அதன் உயர்வுக்கு உரிய செயல்களில் நாம் காட்டுகிற ஆர்வம்—உழைப்பு முதலியவைகளைப் பொறுத்தது தான். ஆண்—பெண் என்கிற பேதம் ஒரு பெரிய தடை அல்ல. பார்க்கப்போனால், உள்ளத்தில் உறுதி கொண்டுவிட்ட ஒரு பெண்ணின் ஆதிக்கம் ஆணின் வலிமையைவிட வலியதாக, பயன்கள் பல தருவதாக. அமையும். ஆகவே, உனது முன்னேற்றத்துக்குத் தேவையான வாய்ப்புகள் உனக்காகக் காத்து நிற்கின்றன."

இவ்விதம் பண்டித மோதிலால் நேரு தமது இளைய மகள் கிருஷ்ணாவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறித்

திருக்கிறார். தந்தையின் ஆசிஉரை புதல்வி விஜயலக்ஷ்மி யின் வாழ்வில் பரிபூரண வெற்றியாக மிளிர்வதை எல் லோரும் உணரமுடியும்.

சுதந்திரப் போரில் தீவிரப் பங்கு பெற்று, மூன்று தடவைகள் சிறை வாழ்க்கை அனுபவித்தாள் விஜய லக்ஷ்மி. இந்தியாவிலேயே முதல் பெண் மந்திரி என்ற அந்தஸ்து அவளுக்குக் கிட்டியது, ஐக்கிய மாகாண மந்திரி சபையில் அவள் இடம் பெற்றபோது. சுதந்திர இந்தியாவின் அயல் நாட்டு ஸ்தானீகராக ரஷ்யாவிலும், அமெரிக்காவிலும் பணி புரியும் பேறு அவளுக்குக் கிட்டியது. உலகத்திலேயே ஒரு பெண் அடையக்கூடிய மிக உயர்ந்த ஸ்தானம்—இதுவரை எந்தப் பெண்ணும் பெற்றிராத தனிப்பெரும் கௌரவம்—என்று போற் றும் வகையில் அவள் 'ஐக்கியநாடுகள் சபை'யின் தலைமைப் பதவியை அடைந்து விளங்குகிறாள்.

நேரு குடும்பத்தின் வரலாறு இந்திய சரித்திரத்தில் சிறப்பான இடம் பெறும் ஓர் அத்தியாயமாகும். தியாகம், வீரம், தன்னிகரில்லாத் தனிப் பெரும் சேவை, நாட்டுப்பற்று முதலியவற்றின் கதம்பம் நேரு குடும்பக் கதை. அம் மலர்ச் செண்டினூடே தகதகக்கும் பொன் இழை போன்றது விஜயலக்ஷ்மியின் வாழ்க்கை வரலாறு.

## அத்தியாயம்-2.

விஜயலக்ஷ்மி பண்டிட் 1900-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 18-ம் தேதியன்று அலகாபாத்தில் 'ஆனந்த பவனம்' எனும் மாளிகையில் பிறந்தாள். அப்போது ஜவாஹர்லால் நேருவுக்குப் பதினேரு வயது.

அதற்கு முந்திய ஆண்டில்தான் மோதிலால் நேரு அந்தப் புதிய பெரிய பவனத்தைக் கட்டிக் குடிபுகுந்தார். வக்கீல் தொழிலில் பிரமாத வெற்றியோடு திகழ்ந்த மோதிலால் ராஜவாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த காலம் அது, மேல்நாட்டு நாகரிக முறையில் வாழ்க்கை நடத்த ஆசைப்பட்ட மோதிலால், அதற்கேற்ற பெரிய மாளிகையை நிர்மாணித்துக் கொண்டார்.

'ஆனந்த பவனம்' அமைக்கப்பட்ட இடம் புராதனப் பெருமையும் புனிதப் புகழும் பெற்றதாம். ராமபிரான் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்துவிட்டு நாடு திரும்புகிற போது, அந்த இடத்தில்தான் பரதன் அவரைச் சந்தித்தாராம், இப்படி ஒரு 'இதிகாசப்புகழ்' இருந்தது அந்த இடத்துக்கு.

பெரிய முற்றங்கள் சூழ்ந்த மாளிகை 'ஆனந்த பவனம்'. நாலாபுறமும் குளுமையான தோட்டங்கள். கனி வகைகள் தருகின்ற மரங்கள் அடர்ந்த தோப்பு பின்புறத்திலே. புஷ்பச் செடி கொடிகள் அணிசெய்யும் அழகுத் தோட்டம் முன்புறத்திலே. அதில் ஒரு 'வசந்த கிரகம்' அருகில் ஓர் அழகுக் குளம். டென்னிஸ் விளையாடும் விசால மைதானம் ஒரு பக்கத்தில். 'வசந்த கிரக'த்தில் சிறுமலை போல் தோற்றமளிக்கும் செய் குன்று ஒன்று. அதன் உச்சியில் சிங்காரக் கொலு இருக்கும் சிவ பெருமான் சிலை. சிவனின் தலைமுடியிலிருந்து சிவிறித் தெறிக்கும் நீரூற்று. வழிந்து பெருகும் அந் நீரூற்று கீழேயுள்ள குளத்தில் கலக்கும். கண் திருப்பினால், எங்கும் வண்ண மலர்களே தென்படும்.

அம்மாளிகை சதா 'கல்யாண வீடு மாதிரியே' திகழ்ந்தது. குதிரைகள் பூட்டிய சாரட்டுகளிலே வந்து வந்து போனார்கள் செல்வர்கள். ஐரோப்பியச் சீமான்கள் அங்கு தங்கிப் பொழுது போக்கிச் சென்றார்கள். விருந்து உண்டு களித்தார்கள். ரத்தமெனச் சிவந்த மது அங்கே தண்ணீர் பட்டபாடு பட்டது! மோதிலாலின் சிரிப்பு வெண்கல நாதம் போல் எழுந்து எங்கும் மோதி எதிரொலிக்கும்.

வலிவும் வனப்பும் நிறைந்த கம்பீர புருஷர் மோதிலால். அறிவின் கூர்மை அவர் கண்களில் ஒளி வீசியது. அவரது தோற்றம் மதிப்பும் அச்சமும் எழுப்புவதாயிருந்தது ஆதி நாட்களிலே. அவரை முதன் முறையாகக் காண நேரிட்டவர்கள் 'கடுமையான சுபாவம் உள்ளவர். வணங்காமுடி மன்னன். யாரையும் பொருட்படுத்தாதவர்' என்றே எண்ணத் துணிந்தனர். மோதிலால் சில சமயங்களில் அவ்விதம் தான் நடந்து கொண்டார். எனினும் அன்பும் ஆதரவும் ஈகையும் அவரது பண்புகள் என்பதை விரைவிலேயே பிறர் புரிந்து கொண்டனர். எவர் மத்தியிலிருந்தாலும் சரி, எக் கூட்டத்தில் இருப்பினும் சரி, அவரே நடுநாயகமாக விளங்கினார். எல்லோரையும் வசீகரிக்கும் காம்பீர்யக் கவர்ச்சி அவரிடம் நிறைந்திருந்தது.

'ஆனந்த பவன'த்தில் மோதிலால் நேருவின் ஆதரவில் வாழ்ந்த உறவினர்கள் பலர். அங்கு வந்து போகும் உறவினர்கள் மிகப்பலர். கும்பமேளா போன்ற விழா விசேஷங்களுக்காக வந்து மாளிகையில் தங்கிச் செல்கிறவர்கள் எவ்வளவோ பேர். ஆகவே, அந்த 'பவனம்' எப்போதும் 'ஜே ஜே' என்று தான் விளங்கியது.

ஆயினும் அங்கே 'தான் தனியன்' என்று குமைந்த ஆத்மா ஒன்று உண்டு. சிறுவன் ஜவாஹர்லால் நேரு தான் அது. தனக்குத் தம்பியோ தங்கையோ இல்லையே என்று பெரிதும் குறைப்பட்டுக் கொண்டிருந் தார் அவர். அவருடைய உள்ளம் குளிரும்படி, நேரு குடும்பத்தின் செல்வ மகளாகப் பிறந்தாள் விஜயலக்ஷ்மி.

மோதிலால் நேருவின் மனைவி சொரூபராணி. ராணி நேரு என்றே குறிப்பிடப்பட்டாள் அவள். அவள் இனிய குணமுடைய எழிலி.

"அவள் அழகைப் போற்றினேன் நான், அதிசயங் கள் போன்ற அவளது சின்னஞ் சிறு கைகளையும் பாதங் களையும் நான் ஆசையுடன் விரும்பினேன்" என்று ஜவாஹர்லால் தனது அன்னையின் அழகு பற்றி வியந் திருக்கிறார்,

"என் தாய் மிகவும் இனிய மாது. ஐந்தடி உயர முள்ள அழகுச் சிறு உருவம் தான் அவள். மிகவும் நேர்த்தியான ஒரு பொம்மை மாதிரி, பூரண உருவமும் அழகு அம்சங்களும் பொருந்தியவள். சரியான காஷ் மீரிப் பெண். ஆனாலும் பண்பினால் அவள் பொம்மை அல்லள் என்பதைக் காலம் பின்னர் உணர வைத்தது." விஜயலக்ஷ்மியின் தங்கை கிருஷ்ணா இப்படி எழுதியிருக் கிறாள் ராணி நேருவைப் பற்றி.

பண்டித நேருவின் குடும்பத்தினர் காஷ்மீர பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள். மோதிலால் நேரு வின் முன்னோர் பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம் பத்திலேயே காஷ்மீரிலிருந்து இறங்கி டில்லிக்கு வந்து

விட்டார்கள். ராணி நேருவின் பெற்றோரும் பாட்டன் மாரும் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் காஷ்மீரி லிருந்து வந்திருந்தனர். ஆகவே காஷ்மீரிகளின் பண்பும் நலனும் வளமும் வனப்பும் ராணி நேருவிடம் நிறைந்து விளங்கின.

அவள் பெற்றெடுத்த திருமகள் அழகு விக்கிரகம் போல் இருந்தது அதிசயம் அல்லவே!

நேரு குடும்பத்தினரின் குழந்தைகள் சில தந்தப் பதுமைகள் போல் விளங்கியது உண்டு. மோதிலால் நேரு பிறந்திராத காலத்திலேயே, அவர் குடும்பத்துச் சிறுமிகளைப் பார்த்து வெள்ளைக்காரக் குழந்தைகளோ» என்று வியந்தனர் பலர்.

1857-ம் ஆண்டில் முதல் இந்தியப் புரட்சி நிகழ்ந்த காலத்தில், நேருவின் முன்னோர் டில்லி நகரை விட்டு வெளியேற வேண்டியது அவசியமாயிற்று. அப்போது மோதிலால் பிறந்திருக்கவில்லை. அவருடைய சகோதரர் கள் ஆங்கிலம் கற்றவர்கள். மோதிலாலின் இரண்டா வது அண்ணா, நேரு குடும்பத்தினர் சிலரோடு, டில்லி யிலிருந்து வெளியேறிச் சென்றபோது ஒரு சம்பவம் நிகழ்ந்தது, அவருடைய தங்கையும் அக்கூட்டத்தில் இருந்தாள். எதிரே இங்கிலீஷ் பட்டாளத்து வீரர்கள் சிலர் அச் சிறுமியைக் கண்டதும் சந்தேகம் கொண்ட னர். வெள்ளைக்காரப் பெண்ணைத் திருடிச் செல்கிறார் கள் என்று நம்பி அவர்களை வளைத்து மிரட்டினார்கள். நேரு சகோதரரின் ஆங்கில அறிவு அவரைக் காப்பாற்றி யது. குற்றம் சாட்டவேண்டியது, விசாரணை என்று

ஏதோ பெயர் பண்ணி, தண்டனை கொடுக்கவேண்டியது உடனடியாக அதை அமுல் நடத்தி விடுவது—இதுதான் அந்நாளைய ஆங்கிலேயர் ஆட்சிமுறையாக இருந்தது. மோதிலாலின் அண்ணனும், பிறரும் பாதை ஓரத்தில் நின்ற மரங்களில் தொங்கி மரணமடைய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். பெரிய நேரு ஆங்கிலேயருடன் பேசிக் காலதாமதம் ஏற்படுத்தி நின்றார். நல்ல வேளையாக, அவரை நன்கு அறிந்திருந்த பிரமுகர் ஒருவர் அவ்வழியாக வந்தார். அவர் உண்மையை எடுத்துச் சொல்லி எல்லோரையும் காப்பாற்றினார்.

ஜவாஹர்லால் நேருவின் அத்தைதான் வெள்ளைக்காரப் பெண்போல் காட்சி அளித்த சிறுமி. மோதிலால் நேரு ஐரோப்பிய முறைப்படியே ஆடைகள் அணிந்தார். அவரது பழக்க வழக்கங்களும் மேல்நாட்டு நாகரிகத்தை ஒட்டியே அமைந்தன. அவர் தனது குழந்தைகளையும் அந்த முறைப்படியே வளர்த்து வந்தார்.

ஜவாஹர்லாலுக்குக் கல்வி புகட்ட ஆங்கிலேயர்களை ஆசிரியர்களாக நியமித்தது போலவே, விஜயலக்ஷ்மிக்கு ஆசிரியையாக பிரிட்டிஷ் மங்கை ஒருத்தியை அமர்த்தினார்.

விஜயலக்ஷ்மியை 'சொரூபா' என்றே அழைத்து வந்தார்கள். அழகிய சிறுமியாக விளங்கிய அவளிடம் எல்லோரும் அன்பும் ஆசையும் காட்டி வந்தார்கள். செல்வர்கள் வீட்டுக் குழந்தைகள் அளவுக்கு அதிகமான சீராட்டுதலையும், பாராட்டுக்களையும் பெறுவது சகஜம். அதிலும், ராஜாமாதிரி வாழ்ந்த மோதிலாலுக்கு

வெகுகாலம் கழித்துப் பிறந்த பெண் சொரூபா. ஆகையினால் அளவுக்கு அதிகமான செல்லம் கொடுத்து அவளை வளர்த்து விட்டனர்.

மோதிலால் ஏகப்பட்ட குதிரைகளையும் நாய்களையும் போஷித்து வளர்த்தார். பல கார்களும் வண்டிகளும் அவரிடமிருந்தன. குதிரை ஏற்றம், வேட்டை ஆடுதல் முதலியவற்றில் அவருக்கு அதிகப் பிரியம் உண்டு. தனது குழந்தைகளும் தன்னைப் போல் சகல கலைகளிலும் பயிற்சி பெறவேண்டும் என்று ஆசைப் பட்டார் அவர். அதனால் ஜவாஹர்லாலுக்குத் தனியாக ஒரு குதிரை அளித்திருந்தது போலவே, சொரூபாவுக்கும் சிறு குதிரை ஒன்று கொடுத்திருந்தார்.

ஜவாஹர்லால் கல்வி கற்பதற்காக இங்கிலாந்து செல்ல வேண்டும் என்று ஏற்பாடாயிற்று. அவரை ஹாரோ சர்வகலாசாலையில் சேர்ப்பதற்காக, 1905–ம் ஆண்டு மே மாதம் மோதிலால் நேரு, தன் மனைவியுடனும் குழந்தை சொரூபாவோடும் இங்கிலாந்து சென்றார். அப்போது விஜயலக்ஷ்மிக்கு ஐந்து வயதுதான்.

தன் மகளைக் கவனித்து வளர்த்து, தக்க பயிற்சி அளிப்பதற்கு ஒரு ஆசிரியை தேவை என்ற எண்ணம் மோதிலாலுக்கு நெடுநாட்களாகவே இருந்து வந்தது. அவர் இங்கிலாந்து சேர்ந்ததும் மிஸ் ஹூப்பர் எனும் பெண்மணியை ஆசிரியையாக அமர்த்திக் கொண்டார்.

இங்கிலாந்திலிருந்து ஐரோப்பிய யாத்திரையை மேற்கொண்டார் மோதிலால். தனது ஐந்தாவது வயதி

லேயே ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய தேசங்களைக் கண்டு களிக்கும் வாய்ப்பு விஜயலக்ஷ்மிக்குக் கிடைத்து விட்டது.

சொரூபாவுக்கு ஆசிரியையாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்த மிஸ் ஹூப்பர் பழங்காலத்துக் கல்வி முறைகளில் நம்பிக்கை கொண்டிருந்தாள். உயர்ந்த குலத்தில் தோன்றிய அம்மாது உத்தம குணங்களின் உறைவிடமாகவும் போற்றத் தகுந்த திறமைகள், பயிற்சிகளின் உருவமாகவும் விளங்கினாள். அவள் பழகுவதற்கு இனியவள். ஆனால் கடமையில் கண்டிப்பானவள். தனது மாணவியிடம் அடக்கம், ஒடுக்கம், கீழ்ப்படிந்து செயல்புரியும் கட்டுப்பாடான சுபாவம் முதலியவைகளை அவள் எதிர்ப்பார்ப்பது வழக்கம். விஜயலக்ஷ்மி தனது ஆசிரியைக்கு அதிகமான தொந்தரவு அளித்தது கிடையாது.

விஜயலக்ஷ்மியின் பெற்றோர் ஐரோப்பாவிலிருந்து திரும்பிய பிறகு அவளுக்கு ஒரு தம்பி பிறந்தான். ஆனால், அக் குழந்தை அதிகநாள் ஜீவிக்கவில்லை. ராணி நேருவுக்கு அது மகத்தான இதய வேதனை அளித்து விட்டது. அவள் அடிக்கடி நோய் வாய்ப்படலானாள்.

அங்கிலையில், 1907-ம் வருஷம் நவம்பர் மாதம் சொரூபாவின் தங்கையாகிய கிருஷ்ணாவைப் பெற்றெடுத்தாள் ராணி நேரு. மிகுதியும் கஷ்டப்பட நேர்ந்தது. அவள் பிரசவத்துக்குப் பிறகு பல வாரங்கள் வரை அத் தாய் வாழ்வுக்கும் சாவுக்குமிடையே ஊசலிட்டவாறு படுக்கையில் கிடந்தாள். அப்போது விஜயலக்ஷ்மிக்கு ஏழு வயது. தனக்கு ஒரு 'சின்னப் பாப்பா' தங்

கையாகப் பிறந்ததில் அவள் மகிழ்ச்சி அடைந்தாள். ஆயினும், அன்னேயின் நிலைமை அவளுக்குத் துயரம் அளிக்காமல் இல்லை.

ராணி நேருவின் உடல்நிலை தேறுவதற்கு நீண்ட நாட்கள் பிடித்தன. அதற்குப் பிறகும் நெடுங்காலம் வரை அவள் நோயாளி அந்தஸ்துடன்தான் வாழ்ந்து வந்தாள். அவள் உடல் பரிபூரணமான சுகநிலை எய்தவில்லை.

கிருஷ்ணுவுக்கு மூன்று வயதானதுமே அக்காளின் ஆசிரியையான மிஸ் ஹூப்பர் தங்கையையும் கவனித்துப் பயிற்றுவிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். கிருஷ்ணுவிடம் நேரு குடும்பத்தினரின் பிறவிக்குணங்களாகிய பிடிவாதம், முன்கோபம், அடங்காத்தனம் முதலியன தொட்டிற் பண்புகளாகப் படிந்து போயிருந்தன. ஆகவே அவள் ஆசிரியைக்கு அதிகத் தொல்லை கொடுத்து வந்தாள்.

மோதிலால் நேரு கிருஷ்ணுவுக்கும் ஒரு குதிரை வாங்கிக் கொடுத்திருந்தார். பனிவெண்நிற அழகுப்புரவி அது. அதை அவள் அன்புடன் நடத்தி வந்தாள். ஆனால் ஒருநாள் அக் குதிரையைப் பாம்பு கடித்துவிட்டது. குதிரை இறந்து போனதும் குமாரி மிகவும் துயருற்று வருந்தினாள்.

விஜயலக்ஷ்மியின் சிறு பருவ நாட்கள் இனியனவாய், மனோகரமானவையாக, கோலாகலமும் செல்வச் சிறப்பும் விழா விமரிசைகளும் நிறைந்தனவாகக் கழிந்தன. ரக்ஷாபந்தன், நவ்ரோஸ் பண்டிகை, தீபாவளி,

ஹோலி, ஜன்மாஷ்டமி, தஸரா, ராமலீலா போன்ற பண்டிகைகள் 'ஆனந்த பவனத்'தில் ஆடம்பரமாகக் கொண்டாடப்படுவது வழக்கம். இவ்விசேஷ தினங்கள் சகோதரிகளுக்கு மிகுந்த உற்சாகம் அளித்தன என்று சொல்லவும் வேண்டுமோ ?

அக் காலத்தில் இன்று போல் சினிமா முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. அபூர்வமாக என்றாவது ஒரு நாள் ஏதோ ஒரு படத்தைப் பார்த்துவரத் தன் புதல்வியருக்கு அனுமதி அளிப்பது மோதிலாலின் வழக்கமாக அமைந்தது. ஆனல் அடிக்கடி சர்க்கஸ் வேடிக்கைகளுக்குச் சென்று வர அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

ஜவாஹர்லால் நேருவுக்கு அற்புதமாகக் கதைகள் சொல்லி உணர்வும் மகிழ்வும் ஊட்டிய முன்ஷி முபாரக் அலி எனும் பெரியார் சொரூபாவுக்கும் கதைகள் சொல்லிக் களிப்பித்தார். குமாரி கிருஷ்ணவுக்கும் இனிய கதைகள் கூறி அவள் மதிப்பைச் சம்பாதித்தார். ஆறடி உயரம் வளர்ந்திருந்த ஆஜானுபாகு அவர். கம்பீரமான தோற்றமும், வசீகர முகத்துக்குத் தனி வனப்பு தந்த நீள் தாடியும் கொண்ட பெரியார் அவர். அவரை எல்லோரும் 'முன்ஷிஜீ' என்றே அன்பாக அழைத்துப் போற்றி வந்தனர். குழந்தைகளுக்கு வீரக் கதைகளும் சரித்திரக் கதைகளும் சொல்வதில் அவர் அதிக உற்சாகம் காட்டி வந்தார். ஜவாஹரிடம் அவருக்கு அளவற்ற அன்பு உண்டு. நம் நேருவுக்கு அவர் மீது எல்லையற்ற பிரியமும் மதிப்பும் உண்டு 1917-ல் புற்றுநோய் கண்டு பல மாத காலம் கஷ்டப்பட்டார். முன்ஷிஜீ. ஆயினும் 'ஜவாஹருக்குத் குழந்தை பிறந்து, அதைக் கண்டு

மகிழ்ந்த பிறகே சாவேன்' என்று உறுதி கொண்டிருந் தார் அவர். மரணத்தோடு போராடி உயிரைப்பிடித்து வைத்திருந்தார். நம் நேருவுக்கு இந்திரா பிறந்ததும், அக் குழந்தையைக் கண்டு களிபேருவகை அடைந்தார் அப் பெரியார். அதன் பின் சில நாட்களிலேயே அவர் உயிர் பிரிந்து விட்டது. அவர் பிரிவைத் தனக்கு வந்த பெரு நஷ்டமாகவே கருதினர் நேரு குடும்பத்தினர் ஒவ் வொருவரும்.

ராணி நேருவுக்குத் தன் அருமை மகன் ஜவாஹர் பேரில் தான் பாசம் அதிகமிருந்தது. அது அவளது பேச்சில் சதா புலப்பட்டது. ஜவாஹர் இங்கிலாந்தில் வசித்து வந்த போதிலும், அவருடைய தாய் தன் மக னைப் பற்றிய நினைப்பில் அதிக இன்பம் கண்டு வந்தாள். அது 'கடைக்குட்டி'யான கிருஷ்ணாவுக்கு ஆத்திரம், வெறுப்பு, பொறாமை ஆகியவற்றையே வளர்த்தது.

உறவினர்களும் பெரியவர்களும் நிறைந்திருந்த அந்த மாளிகையில் அக்காளும் தங்கையும் தான் தோழி கள் போல் பழகிப் பொழுது போக்கி வந்தனர். தந் தையை அவர்கள் எப்பொழுதாவது தான் கண்டு பேசிப் பழக முடிந்தது. தாயுடனும் அடிக்கடி குலவி மகிழ முடிந்ததில்லை. ஆசிரியை மிஸ் ஹூப்பர்தான் சகோதரி களுக்குத் தாய் போலவும் கண்காணிப்பாளாராகவும் இருந்தாள்.

இங்கிலாந்தில் சட்டக்கல்வி பயின்று தேர்ந்த ஜவாஹர்லால் நேரு, ஏழு வருஷங்களுக்குப் பிறகு 1912-ம் ஆண்டில் இந்தியா திரும்பினர். அவர் வருகிறார்

என்ற செய்தி கிடைத்ததுமே ஆனந்த பவனத்தில் பரபரப்பு ஏற்பட்டது. பல வாரங்களாக வரவேற்புக் குரிய ஏற்பாடுகள் நடைபெற்றன. ஒரு இளவரசனை எதிர்நோக்கி விசேஷ ஏற்பாடுகள் செய்வது போலவே அம்மாளிகையிலும் காரியங்கள் நடைபெற்றன. ராணி நேரு ஈடுஇணையில்லா ஆனந்தத்திலேதான் மிதந்தாள். பெற்றோரின் உற்சாகமும் மகிழ்ச்சியும் சகோதரிக ளுக்கு வருத்தம் அளிக்கத்தான் செய்தன. கிருஷ்ணு வுக்குத்தான் அதிகமான இதயவேதனை இருந்தது. அண்ணனைக் கண்ட பிறகு, நேருவின் அழகிய முகத் தையும், மோகன முறுவலையும், பழகிய விதத்தையும் அனுபவித்த பின்னர் அவளால் வெறுப்பையும் பொறு மையையும் வளர்க்க முடியவில்லை!

## அத்தியாயம்-3.

இந்தியாவின் அரசியல் களத்திலே அதிர்ச்சிகளும் தேக்க நிலையும் மாறிமாறித் தோன்றிக் கொண்டிருந்த காலம் அது. அடிமைப் பிடியை உணர்ந்து நிமிர்ந்து சற்றே உலுக்கிக் கொடுத்தது இந்தியா. அது நடந்தது 1857–ம் ஆண்டில். 'சிப்பாய்க் கலகம்' என்று பெயரிடப் பெற்று விட்ட அந்நிகழ்ச்சிதான் இந்தியரின் முதல் புரட்சியாகும்.

அதன் பிறகு 1907-ம் ஆண்டு முதல் இந்தியாவிலே குமுறலும் கொந்தளிப்பும், உரிமைக் கிளர்ச்சிகளும் வெடிக்கலாயின. அந்நிய ஆதிக்கத்துக்கு உட்பட்டு அடிமை வாழ்வு வாழ்வதை மேலும் சகியோம் என்று உறுதி பூண்டது இந்தியா. திலகர், அரவிந்த கோஷ்

போன்றவர்களின் பெயரும் செயல்களும் உலகின் பல திக்குகளிலும் எதிரொலி எழுப்பின. வங்காளத்திலே துணிகரச் செயல்கள் நிகழ்வது சர்வ சாதாரணமாகி விட்டது. மிதவாதிகளும் தீவிரவாதிகளும் இந்திய அரசியலில் சிரத்தை காட்டினர். மோதிலால் நேருவும் காங்கிரசில் சேர்ந்தார். ஆனால் அவர் மிதவாதியாகத் தான் இருந்தார்.

ஆண்டுதோறும் காங்கிரஸ் மகாசபை கூடிக் கொண்டு தானிருந்தது. ஆயினும் அரசியல் வட்டாரத்தில் தேக்கம்தான் ஊறிநின்றது. அங்கிலேயிலேயே தான் முதலாவது உலக யுத்தம் தோன்றியது.

இங்குள்ள அரசியல்வாதிகளின் பேச்சுக்கும் கவனத்துக்கும் உரிய விஷயமாகத் தான் விளங்கியது 'எங்கோ நடந்த யுத்தம்'. யுத்த பயங்கரம் இந்தியா மீது கவியவில்லை. யுத்தம் இந்தியாவையோ, இந்தியரையோ பாதிக்கவுமில்லை. மோதிலால் நேருவின் ராஜரீகமான வாழ்விலே எவ்விதமான குறையும் ஏற்பட்டுவிடவில்லை.

1916-ம் வருஷம் மோதிலால் தன் செல்வப் புதல்வனின் திருமணத்தை மிகவும் ஆடம்பரமாக நடத்தத் திட்டமிட்டார். டில்லி மாநகரில் மணமகள் வீட்டில் தான் கல்யாணம். எனினும் 'ஆனந்த பவன்'த்தில் பல மாதங்களாக விமரிசையான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. ஆபரணங்கள் செய்வோரும், ஆடைகள் தயாரிப்போரும், வியாபாரிகளும், உறவினருமாகப் பெருங்கூட்டம் கூடியிருந்தது அங்கே. பகல் பூராவும்

ஆரவாரமாக உழைத்தார்கள் அவர்கள். எண்ணற்ற குமாஸ்தாக்கள் திட்டமிட்டுத் தீவிரமாகச் செயல் புரிந்து வந்தனர். இந்த ஏற்பாடுகளும் பரபரப்பும் சொரூபாவுக்கும் கிருஷ்ணாவுக்கும் ஆனந்தமளிக்கும் புதுமைகளாகத் திகழ்ந்தன.

வசந்த பஞ்சமி தினத்தில்தான் திருமணம். அதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரே மோதிலால் நேருவின் குடும்பத்தினர் அலகாபாத்திலிருந்து கிளம்பினர். நூறு பேருக்கு அதிகமான விருந்தாளிகள் அவர்களைத் தொடர்ந்தனர். விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட 'ஸ்பெஷல் ட்ரெயின்' மூலம் பிரயாணமானார்கள் அவர்கள். மேலும் பல நூறு விருந்தினர் டில்லியில் கலந்து கொண்டார்கள். அவர்களுக்காக ஏற்பாடு செய்திருந்த வீடுகள் போதுமானதாக இல்லை. ஆகையினால் ஒவ்வொருவருக்கும் தனித்தனிக் கூடாரங்கள் அமைத்துக் கொடுத்தார் மோதிலால். ஒரு வாரகாலத்தில் ஏகப்பட்ட கூடாரங்கள் முளைத்துவிட்டன. அவை பூராவும் தனியானதோர் ஊர்போலவே விளங்கியது. அப் பகுதி 'நேரு திருமண முகாம்' என்றே அழைக்கப்படலாயிற்று.

சாதாரண வீட்டில் சுமாரான கலியாணம் என்றாலே, அவ்வீட்டிலுள்ள சிறுவர் சிறுமிகளுக்குக் கங்குகரை அற்ற ஆனந்தம் பொங்கிப் பெருகுவது இயல்பு. இத்தகைய ராஜரீகமான மண விழாவின் போது சிறுமிகளான சொரூபாவும் கிருஷ்ணாவும் இன்ப உலகில் திரியும் சிறு பறவைகள் போல் களிப்புற்றதில் வியப்பு எதுவும் இல்லைதான்.

டில்லியில் அப்போது கடுங்குளிர் நிலவியது. என்ற லும் மணவிழாச் சிறப்பு குளிரின் கொடுமையை ஓட்டி விரட்டி விட்டது. விஜயலக்ஷ்மியும் கிருஷ்ணுவும் அங்கு குழுமிய உறவுமுறைச் சிறுவர் சிறுமியரோடு ஆடிப் பாடி அகமகிழ்ந்தார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்தில் விருந்தும் வைபவமுமாகப் பொழுது பொன்னுகக் கழிந்தது. இப்படிப் பத்து நாட்கள் அவர் கள் அமோகமான அனுபவம் பெற்றனர். பிறகு அல காபாத் அடைந்தார்கள். அங்கும் பல தினங்கள் வரை விசேஷங்கள் தொடர்ந்தன ; அவர்களை மகிழ்வித்தன.

வீட்டுக்கு வந்த புதுமணப் பெண் கமலா அவர் களுக்குப் பிடித்த இனிய தோழியாகி விட்டாள். 1917-ம் வருஷம் ஜவஹர்—கமலா தம்பதியின் ஒற்றைத் தனி மகள் இந்திரா பிறந்தாள்,

அவ் வருஷம் முக்கிமான விசேஷம் வேறு ஒன்றும் நிகழ்ந்தது. நேரு சகோதரிகளின் ஆசிரியையான மிஸ் ஹூப்பர் ஆங்கிலேய நண்பர் ஒருவரைக் காதலித்து, விரைவில் மணந்து கொள்ளத் தீர்மானித்தாள். அவ ளுடைய உறவினர் அனைவரும் இங்கிலாந்தில் இருந்த னர். ஆகையினுல் மோதிலால் நேருவே தந்தை ஸ்தானத் திலிருந்து அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்க முன் வந்தார். மாதாகோயிலில் மணவினை நடந்தது. அவளது மாணவிகளே மணப்பெண்ணின் தோழியராக விளங்கி ஞர்கள்.

அக் கலியாணம் நேரு சகோதரிகளுக்கு மகிழ்வூட் டும் சம்பவமாக இருந்த போதிலும், அவர்கள் உள்ளத்

தில் வேதனையும் குடி புகுந்திருந்தது. பன்னிரண்டு வருஷ காலம் நேரு குடும்பத்தில், உறவினரில் ஒருவர் போல, வாழ்ந்து வந்தவள் மிஸ் ஹூப்பர். அனைவரும் அவளிடம் பரிவும் பாசமும் கொண்டிருந்தனர். சொரூபாவும் கிருஷ்ணுவும் அவளிடம் அன்பும் மதிப்பும் அளவிலாப் பற்றுதலும் காட்டி வாழ்ந்தனர். இணையிலாத அந்த ஆசிரியை தங்களை விட்டுப் பிரிந்து போகிறாளே என்ற எண்ணம் தான் அவர்களுக்கு இதய வேதனை கொடுத்தது.

ஆசிரியை பிரிந்து சென்ற பின்னர் பல தினங்கள் வரையில் நீடித்திருந்தது அவ் வருத்தம். காலப்போக்கிலே அதுவும் மறைந்தது.

ஆசிரியை போன பிறகு, கிருஷ்ணு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கல்வி பயில ஆசைப்பட்டாள். மோதிலால் நேரு தமது குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப விரும்பியதே இல்லை. வீட்டில் தனி ஆசிரியை நியமித்துக் கல்வி புகட்டுவது தான் தனது அந்தஸ்துக்கு ஏற்ற தனிப்பெரும் கௌரவம் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. பியானோ வாசிக்கும் பயிற்சி, அல்லது வேறு இசைக்கருவி எதையாவது மீட்டும் திறமை, சமூகத்தில் சம அந்தஸ்து உள்ளவர்களுடன் பழகி நன்றாக சம்பாஷிக்கும் சாமர்த்தியம்—இவையே பெரிய இடத்துப் பெண்களுக்கு இன்றியமையாத பண்புகள் என்ற அபிப்பிராயம் நிலவிய காலம் அது. அவ் யுகதர்மங்களைத் தான் நேருவும் கையாள அவாவினர்.

விஜயலக்ஷ்மி வீட்டிலிருந்தபடியே பயிற்சி பெற்று வளர்ந்தாள். அவள் எந்தப் பள்ளிக்கூடத்திலும்

சேர்ந்து கல்வி பயிலவில்லை. பயில ஆசைப் பட்டது மில்லை.

ஆனால், கிருஷ்ணா பள்ளிக்கூட அனுபவம் பெறத் தவித்தாள். தந்தை பிடிவாதமாக மறுத்தார். மகளோ அவரை விட அதிகமாக அடம் சாதித்தாள். முடிவில் தந்தைதான் விட்டுக் கொடுக்க நேர்ந்தது! கிருஷ்ணா வெற்றி மிடுக்குடன் பள்ளியிற் சேர்ந்தாள். புதுப்புது அனுபவங்களும் புதிய புதிய நண்பர்களையும் அடைந் தாள்.

மிஸ் ஹூப்பர் சென்றதிலிருந்து தங்கை கிருஷ்ணா வைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு விஜயலக்ஷ் மிக்கு வந்து சேர்ந்தது. தாயார் நோயின் காரணமாக பலவீன நிலையிலிருந்ததால், அவளால் இளைய மகளைக் கவனித்து வளர்க்க முடியாமல் போயிற்று. சொரூபா தங்கையிடம் கண்டிப்பாகவோ, மூத்தவள் என்ற மிடுக் குடனோ நடந்து கொண்டதே இல்லை. கிருஷ்ணாவைத் தனது இஷ்டம் போல் நடந்து கொள்ள விட்டு விட் டாள் அவள். அது தான் அக்காளுக்குச் சௌகரிய மாக இருந்தது; தங்கைக்கும் மிகவும் பிடித்திருந்தது.

விஜயலக்ஷ்மிக்கு கவிதையில் தனி மோகம் உண்டு கிருஷ்ணாவுக்கும் அது படிந்திருந்தது. ஆகவே அவர்கள் இருவரும் தினந்தினம் மாலை வேளையில் தோட்டத்தில் மரத்தடியில் அமர்ந்து கவிதைகளை ரசித்து மகிழ்வதை வழக்கமாகக் கொண்டு விட்டனர். சொரூபா உரிய பாவங்களோடு கவிதைகளை வாசிப்பாள். தங்கை ஆழ்ந்து கவனித்து அனுபவிப்பது வழக்கம். இருவரிடை,

யேயும் இனிய அன்புப் பிணைப்பு ஏற்பட்டு வளர்ந்து வந்தது. கிருஷ்ணுவின் சிறுபிராயத்திலே விஜயலக்ஷ்மி தான் தங்கையின் தோழியாகவும், நல் வழிகாட்டியாக வும், அன்பு நிறைந்த ஆசிரியையாகவும் விளங்கினுள்.

## அத்தியாயம் 4.

இந்தியாவில் காங்கிரசின் சக்தி வளர்ந்து வந்தது. சுதந்திர ஆர்வம் நாடு முழுவதும் தலை தூக்கலாயிற்று. மகாத்மா காந்தியின் பெயர் மந்திரம் போல் எங்கும் ஒலிக்கத் தொடங்கியது.

முதலாவது உலக மகாயுத்தம் ஒரு சில முதலாளி களைப் பெரும் பணக்காரர்களாக மாற்றிவிட்டது; தொழில் துறையில் அபிவிருத்தி ஏற்படுத்தியிருந்தது. ஆயினும் பெரும்பான்மை மக்கள் மிகுந்த தொல்லைகளை அனுபவித்து, விடுதலை கிட்டாதா என்று ஏங்கிக் கிடந்தனர்.

நாட்டினரை அடக்கி ஒடுக்குவதற்காக் கடுமையான அடக்குமுறைப் பாணங்களையும் புதிய புதிய சட்டங் களையும் ஏவிக்கொண்டிருந்தது. ஆங்கிலேய அரசாங்கம். ஆளவந்தவர்களின் அட்டூழியங்கள் எல்லோர் உள்ளத் திலும் வெறுப்பையே விதைத்து வளர்த்தன.

இந்தியா பூராவும் கிளர்ச்சிகளும், சாத்வீகப் போராட்டங்களும் ஏற்பட்டன. சில இடங்களில் பலாத் காரச் செயல்களும் வெடித்தன. காந்திஜீ சத்தியாக்கிரக சபை ஒன்று தொடங்கிப் போராட்டம் நடத்தி வந்தார்.

ஜவாஹர்லால் நேரு காந்தி வழியால் வசீகரிக்கப் பட்டார். மறியலில் கலந்து சிறை செல்லவேண்டும் என்று துடித்தார் அவர்.

அவருடைய போக்கு தந்தைக்குப் பிடிக்கவில்லை. மோதிலால் நேருவுக்கு புதிய வழிகள் மீது நம்பிக்கை ஏற்படவில்லை. எந்தப் பிரச்னையையும் தீர யோசித்து, ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு உறுதியான முடிவுக்கு வருவதே அவருடைய சுபாவம். இதனால் தந்தைக்கும் மகனுக்குமிடையே பலத்த அபிப்பிராய பேதமும் வாக்குவாதமும் உண்டாயின. இந்நிலைமை வீட்டில் உள்ளவர்களின் ஆனந்தத்தையும் கெடுத்துவிட்டது ஜவாஹரின் தாயும் சகோதரிகளும் மிக்க மனவருத்தம் அனுபவித்தனர்.

இது சம்பந்தமாகப் பேசி ஆலோசனை புரிய காந்திஜியை மோதிலால் 'ஆனந்த பவன்'த்துக்கு அழைத்திருந்தார். அலகாபாத்துக்கு விஜயம் செய்தார் மகாத்மா. நேரு மாளிகையில் தங்கியிருந்து, மோதிலாலு டன் பேசி விவாதித்தார். முடிவில் 'தந்தைக்கு மன வேதனை அளிக்கக்கூடிய காரியம் எதுவும் செய்யவேண் டாம். அவசரப்பட்டுச் செயல் புரியக் கூடாது' என்று ஜவாஹருக்குப் போதித்தார் காந்திஜி.

மகாத்மா நேரு குடும்பத்தின் அதிதியாக வந்திருந்த போது, அவருடைய காரியதரிசி மகாதேவ தேசாயும் உடன் இருந்தார். ஒரு நாள் அவர் விஜயலக்ஷ்மியைத் தனிமையில் கண்டு, 'மாடர்ன் ரிவ்யூ' எனும் பத்திரிகை யின் இதழ் ஒன்றைக் காட்டி, 'இதோ இந்தக் கட்டுரை யைப் படித்துப் பார்த்தாயா?' என்று விசாரித்தார்.

'இல்லையே!' எனச் சொன்னாள் சொரூபா. 'அவசியம் படித்துப் பார். அருமையான கட்டுரை' என்று சிபாரிசு செய்தார் தேசாய்.

ரஞ்சித் பண்டிட் என்பவர் எழுதியிருந்த கட்டுரை அது. ஆழ்ந்த கருத்தும், அறிவொளியும், சிந்தனைப் பொலிவும் நிறைந்த கட்டுரை அது. அதைப் படித்து வியந்தாள் சொரூபா.

அவளிடம் கட்டுரையாளரைப் பற்றி விவரித்தார் தேசாய். அவர் நல்ல அறிவாளி; மகாமேதை; கல்வியில் தேர்ந்தவர்; ஆராய்ச்சியில் தீரர் என்று புகழ்ந்தார். தனது நண்பன் என்றும், தன்னோடு சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றவர் என்றும் எடுத்துரைத்தார். காவியங்களை ரசித்து மகிழும் பண்பு உடையவர்; பாரிஸ்டர் எனச் சொன்னார் தேசாய்.

அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. ரஞ்சித் பண்டிதரை சொரூபாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார். இருவருக்கும் நட்பு உண்டாயிற்று; அன்பு வளர்ந்தது; இனிய காதலாக மலர்ந்தது.

இதில் ஒரு விசேஷம் உண்டு. அழகி விஜயலக்ஷ்மிக்கும் அறிஞர் ரஞ்சித் பண்டிட்டுக்கும் இவ்வித உறவு ஏற்பட வேண்டும் என விரும்பியவர் காந்திஜீதான். கன்னியின் கருத்துக்கு ஏற்ற காதலனைக் கணவனாக்கி, அவள் வாழ்வை மாண்புடையதாக்க வேண்டும் என்ற ஆசை ரொம்ப நாட்களாக அவர் உள்ளத்தில் இருந்தது. சொரூபாவுக்கும் ரஞ்சிதருக்கும் நல்ல பொருத்தம் என்று கணித்துவிட்டார் அவர். அதனாலேயே தக்க

முறையில் தகுந்த சந்தர்ப்பத்தில் அறிமுகம் செய்து வைக்கும்படி மகாதேவ தேசாயை அவர் ஏவினார்.

இப்படிப் பிறந்த அறிமுகம் அவர்கள் விரும்பிய படி கலியாணத்திற்கு வகை செய்தது.

இடைக்காலத்திலே அரசாங்கம் இந்தியாவில் தலை காட்டியுள்ள சுதந்திர ஆர்வத்தைத் தீர்த்துக் கட்டு வதற்காகத் தானறிந்த 'அதிர்ச்சி வைத்தியங்களைக் கையாண்டு வந்தது. அவற்றின் சிகரமாக அமைந் திருந்தது, 1919-ம் வருஷம் அமிருதசரஸ் ஜாலியன் வாலாபாக்கில் நடந்த பேயாட்டம். 'பஞ்சாப் படுகொலை' என்று பெயர்பெற்ற அந்த வெறிக்கூத்து விளைவித்த உயிர்ச்சேதம் மிகவும் பயங்கரமானது. 'சுட்டேன்... சுட்டேன்... துப்பாக்கியில் தோட்டா தீரும் வரையில் சுட்டேன். இன்னும் தோட்டாக்கள் இருந்திருப்பின் மேலும் அதிகமாகக் கொன்று குவித்திருப்பேன்' என்று வெள்ளையன் டயரை வெறியோடு கொக்கரிக்கத் தூண் டிய அதே சம்பவம், அதுவரையில் அரசியலில் தீவிர மாகப் பங்கு பற்றாத பலரையும் உலுக்கிக் களத்திலே குதிக்கத் தூண்டியது.

அவ்விதம் போராட முன்வந்தவர்களில் முக்கிய மானவர் மோதிலால் நேரு. அந்நிய ஆட்சிக்குச் சீட்டுக் கொடுத்து, அடிமைப் பிழைப்புக்குச் சவக்குழி தோண்டியே ஆகவேண்டும் என்றும் உறுதிபூண்டு தேசப்பணியில் மும்முரமாக ஈடுபட்டார் அவர். அந்த ஆண்டு இறுதியில் அமிருதசரஸில் கூடிய காங்கிரஸ் மகாசபைக்கு அவரே தலைவரானார்.

1920-ம் வருஷம் அரசியல் போராட்டங்களும் கிலாபத் கிளர்ச்சியும் வலுப்பெற்று வளர்ந்தன. இந்திய மக்களின் உரிமை உணர்ச்சியும், தீவிரச் செயல்களும் வெள்ளையர் உள்ளத்தில் பீதியை நிறைத்தன.

ஜவாஹர்லால் நேரு இந்திய அரசியல் வானத்தில் முளைத்த புதிய தாரகை யென ஒளியுடன் திகழ்ந்தார். அவரது ஆர்வமும் திறமையும் சேவையும் எங்கும் பிரகாசித்தன.

நேரு குடும்பத்தின் கௌரவம் உயர்ந்தது. மோதிலால் நேருவின் தியாகமும் வீரமும் நாட்டு மக்களின் இதயத்திலே அவருக்குத் தனியானதொரு இடத்தைத் தேடிக் கொடுத்தன.

இத்தகைய சூழ்நிலையில் தான் விஜயலக்ஷ்மியின் திருமணம் நிகழ்வதற்கு ஏற்பாடாயிற்று.

'ஆனந்த பவன'த்துக்கு வந்து போய்க்கொண்டிருந்த விருந்தாளிகளுக்கு ஒன்றும் குறைவு கிடையாது ஆனால், மோதிலால் நேரு பிரபல வக்கிலாக வாழ்ந்த போது வந்த அதிதிகளின் தன்மை ஒரு ரகம். அவர் காங்கிரசில் சேர்ந்து நாட்டுப் பணிபுரியத் தொடங்கிய பிறகு வந்து சென்றவர்கள் வேறு ரகத்தினர்.

1921-ம் வருஷத்தில் ஒரு நாள். நேருவின் காரில் வந்து இறங்கிய அதிதி ஒருவர், தோட்டத்தில் நின்ற கிருஷ்ணாவின் கவனத்தைக் கவர்ந்தார். அழகும் உயரமும் பெற்ற இளைஞர் அவர். எல்லோரையும் போல அவரும் யாரோ ஒரு விருந்தாளி என்று தான் கிருஷ்ணா

எண்ணினாள். அதனால் அவரைப் பற்றி விசாரித்து அறிய அவள் ஆர்வம் கொள்ளவில்லை. மாளிகைக்கு வந்து போகும் அதிதிகளைப் பற்றி அவள் என்றுமே அக்கறை கொண்டதில்லை.

அன்று மாலையில் கிருஷ்ணா அதிதி அறையின் பக்கமாக நடந்த போது, யாரோ பாடிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். அவளுக்கு அது பேராச்சரியமாகவும் புதுமையாகவும் பட்டது. அந்த வீட்டில் யாரும் வாய் விட்டுப் பாடத் துணிந்தது கிடையாது. பாட்டின் ஒலி கேட்டாலே மோதிலாலுக்குக் கோபம் பொங்கிப் பாய்ந்து விடும். இந்திய சங்கீதம், மேல் நாட்டு சங்கீதம் —எந்தச் சங்கீதமும் அவருக்குப் பிடிக்காது.

கிருஷ்ணாவுக்குச் சங்கீதம் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற துடிப்பு இருந்தது. இன்னிசைக் கருவி எதிலாவது நல்ல பயிற்சி பெற வேண்டும் என்ற ஆசை இருந்தது. எனினும் உள்ளத் துடிப்பைச் செயல்படுத்தும் துணிவு அவளுக்கு இருந்ததில்லை. தந்தையிடம் அவள் கொண்டிருந்த அச்சம் தான் காரணம்.

ஆகவே, அந்த வீட்டில் தந்தைக்குக்கூட பயப்படாமல் யார் துணிகரமாகவும் அருமையாகவும் பாடுகிறார்களோ என்ற எண்ணம் அவளை அசையாப் பதுமை போல் நிற்க வைத்தது. அறையினுள்ளிருந்து வந்த கானம் அவள் உள்ளத்தைத் தொட்டது. அந்த வழியாக வந்த வேலைக்காரன் ஒருவனிடம், பாடுவது யார் என்று விசாரித்தாள் கிருஷ்ணா. அன்று காலையில் வந்த விருந்தாளி தான் அற்புதமாகப் பாடுகிறார் என்பது அவளுக்குப் புரிந்து விட்டது.

வாலிப அதிதியின் பாடலைக் கேட்டுப் பரவசமுற்று அங்கேயே நின்ருள் அவள். பாட்டு முடிந்த பிறகு கூட அவளால் நகர இயலவில்லை. அதனுல், அறைக் கதவு திறக்கப்பட்டதை அவள் உணரவே இல்லை.

'ஹலோ! நீ தான் குட்டித் தங்கச்சி என்று நினைக்கிறேன்' என்ற குரல் அவளை உலுக்கியது.

கிருஷ்ணு திரும்பிப் பார்த்தாள். சிரிப்பு மிதக்கும் ஒளிக்கண்களைக் கண்டாள். சட்டென நாணம் அவளைக் கவ்விக் கொண்டது. இருப்பினும் சமாளித்துக் கொண்டாள். 'ஆமாம். நான் தான் சின்னவள். நீங்கள் யார்?' என்று கேட்டாள் கிருஷ்ணு.

'நான் தான் ரஞ்சித். நாம் இரண்டு பேரும் நண்பர்கள். சரிதானே?' என்று அன்பாகப் பேசி, கிருஷ்ணுவின் கையைப் பற்றிக் கொண்டு, அவளைத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்ருர் அவர்.

'நீங்கள் எதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள்?' என்று கிருஷ்ணு வினவினுள்.

'உன் அக்காளைச் சந்திப்பதற்காகத் தான். வேறு எதற்காக?' என்ருர் ரஞ்சித்.

'ஏன் சந்திக்க வேண்டும்?' என்ருள் தங்கச்சி.

'ஏனம்மா, உன் அக்காளை மற்றவர்கள் சந்தித்துப் பேசுவது உனக்குப் பிடிக்காதோ?' என்று கேள்வி போட்டார் அவர்.

கிருஷ்ணு அலட்சியமாகச் சொன்னுள் : 'எல்லாம் எனக்கு ஒண்ணேதான்! ஆனுல் அவளைச் சந்திக்க நீங்கள் இவ்வளவு தூரம் பயணப்பட்டு வருவானேன் என்பது தான் என் கேள்வி.'

ரஞ்சித் சிரித்தார். 'சின்னப் பெண்ணே! உன்னிடம் ஒரு சங்கதி சொல்வேன். அதை ரகசியமாக வைத்துக்கொள்ள உன்னுல் முடியுமோ?' என்ருர்.

ஓ! எனக்குப் பதிமூணு வயசு ஆகிவிட்டது தெரியுமா? நான் பெரியவளாக்கும்!' என்ருள் தங்கச்சி.

அடேயப்பா. ரொம்ப ஜாஸ்தியான வயசுதான் அது. நீ பெரியவள் தான். அது சரி. விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். அதை உன்னேடு ரகசியமாக வைத்துக் கொள்ள வேணும். நான் வந்து சொரூபாவை கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன். உங்க அப்பா அதற்குச் சம்மதிப்பாரா?'

அவர் அவ்விதம் சொன்னதும் கிருஷ்ணுவின் உள்ளம் துள்ளிக் குதித்தது. 'ஆகா! அக்காளை மணந்து கொள்ளவா? எவ்வளவு அற்புதம்! எவ்வளவு மனேகரமாக இருக்கிறது இந்த விஷயம்! நீங்கள் அவளை எப்ப சந்தித்தீர்கள்? எங்கே கண்டீர்கள்? எப்போது இந்த முடிவுக்கு வந்தீர்கள்? எனக்கு எவ்வளவு பரவசம் ஏற்படுகிறது, தெரியுமா? நீங்கள் அத்தானுக வருவது எனக்கு ரொம்பவும் பிடிக்கும்' என்று 'பொரிந்து கொட்டினுள்' விஜயலக்ஷ்மியின் தங்கை.

'வந்தனம். இளைய ராணி அங்கீகரித்த பிறகு எனக்குக் கவலையே கிடையாது. மற்றுமுள்ள அனைவ

ரும் தாராளமாக ஆமோதித்து விடுவார்கள்' என்று வேடிக்கையாகப் பேசினார் ரஞ்சித்.

இவ்வித இனிய சுபாவம் பெற்ற ரஞ்சித் விஜய லக்ஷ்மியின் உள்ளம் கவர்ந்த நாதனாக வாய்த்ததில் அதிசயம் இல்லைதான்.

ரஞ்சித் கல்கத்தாவில் பாரிஸ்டராகச் செயலாற்றி வாழ்ந்தார். சமஸ்கிருத மொழியில் தேர்ந்த ஞானம் பெற்றவர் அவர். இசை வல்லுனர். நற்பண்புகளின் உருவம்.

அவருக்கும் விஜயலக்ஷ்மிக்கும் 1921 மே பத்தாம் நாள் திருமணம் நடைபெற்றது. அலகாபாத்தில் 'ஆனந்த பவனத்'தில் தான் கலியாண விழா.

மணவிழாவுக்கு காந்திஜீ, அலி சகோதரர்கள் முதலியவர்கள் விஜயம் செய்வதாகத் தெரிந்ததும், உள்ளூர் காங்கிரஸ்வாதிகள் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ளத் துணிந்தனர். பெரிய பெரிய தலைவர்கள் கலந்து கொள்ளும் விதத்தில், சிறந்த முறையில் ஜில்லா காங்கிரஸ் மகாநாட்டை அலகாபாத்தில் கூட்ட ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த விளம்பரத்தினால் அக்கம் பக்கத்தில் உள்ள விவசாயிகள் ஆயிரக் கணக்கில் வந்து குழுமுவது சாத்தியமாயிற்று.

நேரு வீட்டுக் கலியாண ஆர்ப்பாட்டமும் காங்கிரஸ் மகாநாட்டின் ஆரவாரமும் சேர்ந்து அலகாபாத் நகரமே அமர்க்களப்பட்டது. இவற்றால் அங்கு வாழ்ந்த ஆங்கிலேயர் கதிகலங்கிப் போனார்கள். திடீரென்று ஒரு

புரட்சி வெடித்து விடும் என்று அவர்கள் அஞ்சினர். தங்கள் வீடுகளில் வேலை பார்த்து வந்த இந்தியர் மீது கூடச் சந்தேகம் கொண்டு பீதியுடன் பொழுது போக்கினுர்கள். தங்களது கோட்டுப் பைகளில் ரிவால்வரைப் பதுக்கி வைத்து அலைந்தார்கள். திடீரென்று பயங்கர நிகழ்ச்சி ஏதாவது வெடிக்குமாஞல், வெள்ளையர்கள் பம்மிப் பதுங்குவதற்கு வசதியாக அலகாபாத் கோட்டை தக்க பாதுகாப்புகளுடன் தயார் படுத்தப் பெற்றிருந்தது.

வெள்ளையரின் உள்ளக் கலக்கம் அர்த்தமற்றது; காரணமற்றதுதான். அவ்வளவு தூரம் மருண்டு போயிருந்தார்கள் அவர்கள். அவர்களுடைய தொடை நடுக்கத்துக்கு முக்கியமான அடிப்படை விஜயலக்ஷ்மியின் கலியாணத்துக்காகக் குறிக்கப்பட்டிருந்த நல்ல நாள் தான்.

பஞ்சாங்கத்தைப் பார்த்துப் பெரியோர் நிச்சயித்த புண்ணிய நாள் அது. ஆனல் வெள்ளையரின் எண்ணத்திலே 1857-ம் ஆண்டு மே மாதத்தின் பத்தாம் நாள் தான் நினைவுக் கனலாகச் சுட்டது! அத் தினம் தான் மீரத்தில் முதல் இந்தியப் புரட்சி நடைபெற்றது.

அந் நினைவு நாளைக் கொண்டாடும் முறையிலே மற்றுமோர் புரட்சிக்குத் தயாராகிறுர்கள் காங்கிரஸ்காரர்கள் என்று வெள்ளையர் கருதினர். நேரு மகளுக்குக் கலியாணம் என்பது 'ஆங்கிலேயர் கண்ணிலே மண்ணைத் தூவுவதற்காக' என்று நினைத்து விட்டார்கள் அவர்கள். அந்தோ பரிதாபம்!

கலியாணம் நிகழ்ந்த கொஞ்ச காலத்திற்குள்ளாக, ரஞ்சித் பண்டிட் பாரிஸ்டர் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு, அரசியலில் தீவிரமாகக் கலந்து விட்டார். கல்கத்தா நகரை விடுத்து, அலகாபாத் 'ஆனந்த பவன்'த்தில் வசிக்க வந்து சேர்ந்தார்.

அவர் கிருஷ்ணுவுக்குத் தோழனுகவும், சகோதரன் போலவும், ஆசிரியனுகவும், விளங்கினுர். கிருஷ்ணுவைப் பொறுத்தவரையில் ஜவாஹர் அதிசயித்துப் போற்று வதற்குரிய 'பெரிய அண்ண'ணுகத்தான் இருந்தார். ரஞ்சித் பண்டிட்தான் அவள் மனதுக்குப் பிடித்த நல்ல சகோதரன். அந்த 'லட்சிய சகோதரன்' கிருஷ்ணுவுக்கு டென்னிஸ், நீச்சல், நடனம் முதலியவைகளேக் கற்றுக் கொடுத்தார்.

"ரஞ்சித் அரசியல் உலகில் சிக்கிக் கொண்டது சரியல்ல என்பதே என் அபிப்பிராயம். அரசியல்வாதிக் குத் தேவையான தகுதிகளும் திறமைகளும் அவரிடம் கிடையாது. அவர் மிகவும் பிரபலமான வக்கீலாக முன்னுக்கு வந்திருக்க முடியும். அதற்கு வேண்டிய கூரிய அறிவும் நுணுகி ஆராயும் உள்ளமும் அவரிட மிருந்தன. அவர் சிறந்த கலேஞராகவோ, தேர்ந்த விளே யாட்டு நிபுணராகவோ வளர்ந்திருக்க முடியும். ஆனுல் அரசியலுக்காக அவர் அனேத்தையும் துறந்து விட்டார்" என்று கிருஷ்ணு எழுதியிருக்கிருள்.

## அத்தியாயம் 5.

காலவேகம் நாட்டில் புரட்சிகரமான மாறுதல் களே ஏற்படுத்தியது போலவே, நேரு குடும்பத்திலும் பெரியபெரிய மாற்றங்களே உண்டாக்கியது.

ஜவாஹர்லாலின் உறுதியான தேசப்பற்றும், பொது நல லட்சியமும், ஊக்கமான உழைப்பும் தந்தை நேரு வின் விடாப்பிடியான கொள்கைகளையும் தளரவைத்து விட்டன. மகனிடம் அவர் கொண்டிருந்த அளவிலா அன்பு தான் இதற்கு முக்கிய காரணமாகும்.

தந்தையும் மகனும் தீவிர அரசியல் தலைவர்களாக மாறினார்கள். சுதந்திரப் போரில் தன்னிகரில்லாத் தனிப்பெரும் பணிஆற்றினார்கள். அந்தஅந்தக் காலத் துக்கு ஏற்ப காந்திஜீ காட்டிய வழிகளையும், வகுத்த திட்டங்களையும் வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் முன்நின்றார்கள். அடிக்கடி சிறையினுள் அடைபட்டு வாடினார்கள்.

இவற்றால் எல்லாம் 'ஆனந்த பவனம்' தனது ராஜரீகத்தைப் பறிகொடுக்க நேர்ந்தது. மோதிலால் நேரு வக்கில் தொழிலைத் துறந்துவிட்ட உடனேயே குடும்பம் பலபல மாறுதல்களை அனுபவிக்க வேண்டிய தாயிற்று.

மோதிலால நேரு லட்சலட்சமாகச் சம்பாதித் தார். பணத்தைச் சேமித்து வைக்கவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்ததில்லை. தாராளமாக அள்ளி வீசி ஆடம்பரமாக வாழ்க்கை நடத்தினார். வருமானம் நின்று போனதும், செலவுகளைக் குறைக்க வேண்டியது அவசியமாயிற்று.

ஆகவே முதல் காரியமாக அவர் தன்னிடமிருந்த குதிரைகளையும் வண்டிகளையும் விற்றுவிட்டார். இதைச் செய்வது அவரது மனதுக்குப் பிடித்த காரியமல்ல.

குதிரைகளை அவர் மிகுதியும் விரும்பினார். அவற்றிடம் விவரிக்க முடியாத அன்பு காட்டினார். எண்ணற்ற குதிரைகளை வளர்ப்பதில் பெருமை கொண்டிருந்தார். இருந்தாலும் என்ன செய்வது? வேறு வழி இல்லை.

அடுத்தபடியாக, பவனத்திலே பட்டாளம் போல் நிறைந்திருந்த பணியாளர்களை வேலையிலிருந்து நிறுத்தினார். எங்கெந்த விதமாகவெல்லாம் செலவைக் குறைத்துச் சிக்கனப்படுத்த முடியுமோ, அவற்றை அனுஷ்டிக்க நேரு குடும்பத்தினர் தயங்கவில்லை.

விருந்துகளும் கேளிக்கைகளும் இல்லாது போயின. இரண்டு மூன்று சமையல்காரர்கள் இருந்த வீட்டில் ஒரே ஒருவன் போதும் என்று தீர்மானிக்கப்பட்டது. அநேக பட்லர்களும், அவர்களுக்குத் துணையாகத் திரிந்த எடுபிடி சிப்பந்திகளும் வேலை இழந்தனர். மாளிகைக்கு அழகு செய்து விளங்கிய விலைமதிப்பில்லா ஜம்பப் பொருள்கள் பலவும் விற்பனையாயின. ராஜபோக வாழ்க்கை வாழ்ந்து பழகிய நேரு குடும்பத்தினர் எளிய வாழ்க்கையை அனுபவித்து உணரலாயினர். இவை எல்லாம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அளவிட இயலாத வேதனையைப் புகுத்தியது இயற்கைதான்.

தலைகீழான இத்தகைய திடீர் மாறுதல் ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் இதுதான்' என்று ஒரு சம்பவத்தை வீட்டு வேலைக்காரர்கள் குறிப்பிட்டுப் பேசுவது சகஜமாகப் போயிற்று. விசித்திரமான நிகழ்ச்சி தான் அது. இந்தியரின் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் புராதனமான நம்பிக்கை தூண்டிய பேச்சு அது.

சில பெரிய வீடுகளில் தோட்டத்திலோ, எங்கோ நல்ல பாம்பு கரந்து உறையும். அதை மனைப் பாம்பு என்றும், அதனால் வீட்டில் உள்ளவர்களுக்கு எவ்வித மான தீங்கும் வராது என்றும், நம்புவது மக்களின் இயல்பு. அதைக் கொல்வது பாபம் மாத்திரமல்ல; கெட்ட காலத்துக்கு அறிகுறியுமாகும் என்று சொல்வர்.

'ஆனந்த பவன'த்தின் பெரிய தோட்டத்தில் சிறு சிறு வீடுகள் பல நின்றன. கரி, விறகு, மரக்கட்டைகள் முதலிய பலரகமான பொருள்களைப் போட்டு பூட்டி வைக்கவே அவ்வீடுகள் பயன் பட்டன. மரக்கட்டைகள் நிறைந்து கிடந்த சிறு வீடு ஒன்றில் பெரிய தொரு கிருஷ்ணசர்ப்பம் வசித்து வந்தது. ரொம்ப காலமாக அது அங்கு குடியிருந்தது. ஒரு தடவை கூட அது எவருக்கும் தீமை புரிந்தது இல்லை. யாரும் அதற்குத் தீங்கு எண்ணியதுமில்லை. வேலைக்காரர்கள் அச்சம் இல்லாமல் அங்கு போவார்கள், வருவார்கள். நடுராத்திரியில் கூட அங்கே சென்று வருவது வழக்கம். 'பாம்பு இருக்கிறதே!' என்று ஒருவர் கூடப் பயந்தது கிடையாது. 'மனைப்பாம்பு. இது இருக்கிறவரையில் வீட்டுக்கோ, குடும்பத்துக்கோ எவ்விதக் குறையும் இல்லை. செல்வமும் சிறப்பும் பொங்கிப் பெருகும்' என்றே பலரும் பேசி வந்தனர்.

1920–ம் வருஷம், மோதிலால் நேரு தொழிலைத் துறப்பதற்குக் கொஞ்ச காலத்துக்கு முந்தி, புதிதாகச் சேர்ந்திருந்த வேலைக்காரன் ஒருவன் பாம்பைக் கண்டு பயந்து போனான். சாயங்கால நேரம். பெரிய பாம்பு அது. அவனது திகில் வளர்ந்ததே தவிரக்குறையவில்லை.

வேறு சிலரையும் சேர்த்துக்கொண்டு அவன் அந்த நாகத்தை வேட்டையாடிக் கொன்று தீர்க்கும் வரை வாளா இருக்கவில்லை.

இவ் விஷயத்தை அறிந்ததும் பழைய வேலைக்காரர்கள் பதறினார்கள். குடும்பத் தலைவி ராணி நேரு உள்ளக் கலக்கம் எய்தினாள். என்ன பிரயோசனம்? 'நடந்தது நடந்து விட்டது. இனித் தவிர்க்க முடியுமா? வருவது வந்துதானே தீரும்' என்று அமைதிபெற முயன்றார்கள்.

விரைவிலேயே 'பவனம்' முன் கண்டிராத பெரும் பெரும் மாற்றங்களை அனுபவிக்க நேர்ந்தது. மனைப் பாம்பின் பெருமையைப் பேசத் தவறுவார்களா விஷயம் அறிந்தவர்கள்.

மோதிலால் நேரு எதைப்பற்றியும் கவலை கொள்ள வில்லை. தமது வாழ்க்கை ஏட்டிலே புதுக் கணக்கைத் திட்டத் துணிந்தார் அவர். அறுபதாவது வயதிலே முற்றிலும் புதுரகமான வாழ்க்கையைத் தேர்ந்து கொண்ட அவரது துணிவும் மன உறுதியும் நேரு குடும்பத்தினர் அனைவருக்கும் அதிசயிக்கத் தக்க விஷயமாகவும் போற்றத் தகுந்த பண்பாகவுமே விளங்கின.

மோதிலால் நேரு வக்கீல் தொழிலைத் துறந்த பிறகும், கையிலிருந்த சில வழக்குகளை முடித்துக் கொடுப்பதற்காக நீதிமன்றம் சென்று வந்தார். அவருடைய பழைய கட்சிக்காரர்கள் தங்களின் புதிய வழக்குகளையும் அவரே ஏற்று நடத்த வேண்டும் என்று கெஞ்சிக் கேட்பது வழக்கமாகிவிட்டது. யார் எவ்வளவு

மன்றாடினாலும் சரி ; தந்தை நேரு தனது வைராக்கியத்தைத் தளர்த்தியதே இல்லை. பலர் பெருந்தொகை தருவதாக ஆசை காட்டுவர் ; எனினும் அவர்கள் முயற்சி பலித்தது கிடையாது. ஒரு சமயம் கட்சிக்காரர் ஒருவர் தனது வழக்கு ஒன்றை நடத்தித் தருவதற்கு அவருக்கு லட்சம் ரூபாய் தருவதாக முன்வந்து வேண்டினார். அந்தச் சந்தர்ப்பத்தில் மோதிலாலுக்குப் பொருளாதாரக் கஷ்டமும், பணத்தேவையும் அதிகம் தான். என்றாலும், கொண்ட கொள்கையே பெரிது என்ற உறுதி பூண்ட நேரு அதை மறுத்து விட்டார்.

இவ்வித அரும் குணங்கள் பெற்ற மோதிலால் இந்தியாவின் இணையிலாத் தலைவர்களில் ஒருவராகஅழியாப் புகழ் பெற்றுள்ளது நியாயமான சிறப்பு தான்.

## அத்தியாயம் 6.

1921-ம் வருஷம் ஆங்கிலேய அரசாங்கம் இந்திய அரசியல்வாதிகளை இஷ்டம் போல் சிறைகளுக்குள் தள்ளிப் பூட்டி வைத்தது.

அந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஆறும் நாள் மாலையில் தான் போலீசார் முதன் முறையாக 'ஆனந்த பவன'த்தில் அடி எடுத்து வைத்தார்கள். வீட்டைச் சோதனை போட்டார்கள். மோதிலாலையும் ஜவாஹரையும் கைது செய்து அழைத்துச் சென்றார்கள்.

அதற்குப் பிறகு போலீஸாரின் திடீர் வருகையும் பரிசோதனைகளும் அடிக்கடி நேரிடும் நிகழ்ச்சிகள் ஆகி விட்டன. தந்தையும் மகனும், 'நாடாறு மாதம் காடாறு

மாதம்' என்பது போல, வீட்டில் கொஞ்ச நாள் ; ஜெயிலில் ரொம்ப காலம் என்ற தன்மையில் வாழ நேரிட்டது.

விஜயலக்ஷ்மி தன் கருத்துக்கு இசைந்த கணவன் ரஞ்சித் பண்டிட்டுடன் இல்வாழ்க்கையை இனிது நடத்தி வந்தாள். கவிதா ரசனையும், அழகிய இடங்களில் சுற்றும் ஆர்வமும் அவ் விருவருக்கும் இயல்பாக அமைந் திருந்தன. கலியாணமானதிலிருந்தே அவர்கள் மன உல் லாசத்துக்காகவும் ஓய்வு நாடியும் ஐரோப்பாவில் யாத் திரை செய்ய வேண்டும் என்ற ஆசையை வளர்த்து வந்தனர். ஆனாலும் அந்த எண்ணம் செயலாகக் கனி வதற்குச் சில வருஷங்கள் பிடித்தது.

1926-ம் வருஷம் மார்ச் மாத ஆரம்பத்தில் ஜவா ஹர்லாலும் அவர் மனைவி கமலாவும், குழந்தை இந்திரா வுடன் ஐரோப்பிய யாத்திரை தொடங்கினர். பல மாதங் களாகவே கமலா நேரு நோயினால் மிகவும் கஷ்டப்பட் டாள். அவளது சிகிச்சைக்காக ஸ்விட்ஸர்லாந்து செல்ல வேண்டியது அவசியமாயிற்று.

பம்பாயிலிருந்து வேனிஸ் நகருக்கு அவர்கள் கப்பல் பிரயாணம் கிளம்பிய போது, விஜயலக்ஷ்மியும் அவள் கணவர் ரஞ்சித் பண்டிட்டும் உடன் சென்றனர்.

ஜவாஹர்லால் நேரு ஐரோப்பாவில் பல மாதங்கள் தங்க நேர்ந்தது. விஜயலக்ஷ்மியும் ரஞ்சித பண்டிட்டும் கொஞ்ச காலம் அங்கு தங்கி, பல நாடுகளிலும் யாத் திரை செய்து, நல்ல அனுபவம் பெற்று இந்தியா திரும் பினர்.

குடும்பத்திலும், நாட்டிலும் நிகழ்ந்து வந்த மாறுதல்கள் விஜயலக்ஷ்மியின் உள்ளத்திலும் கிளர்ச்சி ஏற்படுத்தி வந்தன. சகோதரனின் தீவிரமும், தந்தையின் செயல்களும் அவள் இதயத்திலே தேசீயக் கனலைக் கொழுந்து விட்டு எரியத் தூண்டின. காந்திஜீயின் ஒளி அவளையும் இழுத்தது. வாழ்க்கையில் எதிர்ப்பட்ட எல்லா மாறுதல்களையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டாள் அவள்.

வெகுகாலம் வரை விஜயலக்ஷ்மி ஆங்கிலேய மோஸ்தரிலேயே ஆடைகள் அணிந்து பழகியவள். பிறகு மென்மையான பட்டாடைகள் கட்டி உல்லாச வாழ்வு வாழ்ந்தவள். தேசீய உணர்வு ஏற்பட்டதும் அவளும் கதருடையை உள்ளத்து உவகையுடன் ஏற்றுக் கொண்டாள். அக்காலத்தில் 'கதர்ப்பட்டு' என்று சொல்லப் பெற்ற விலை உயர்ந்த துணிகூட மிகவும் கரடுமுரடாகவும் கனமுள்ளதாகவும் தான் இருந்தது. அத்துணியைக் கட்டிப் பழக்கம் படிகிற வரை, நேரு குடும்பத்தினர் வெகு சிரமம் அனுபவிக்கத்தான் செய்தனர்.

இத்தகைய மகத்தான மாறுதல்களை எல்லாம் மோதிலாலின் மனைவி ராணி நேரு பொறுமையுடனும் புன்னகையுடனும் சகித்து வந்தாள். பாரதப் பெண்மையின் பரிபூரண பிம்பம் அவள். கணவன் காட்டிய வழியே தனது வாழ்வு என மதித்து, தன் இதய உணர்ச்சிகளையும் எண்ணத் துடிப்புகளையும் தனது உள்ளத்தினுள்ளேயே ஒடுக்கிவிடும் பண்பு பெற்ற உத்தமி அவள். கால வேகம் ஏற்படுத்திய எத்தனையோ மாற்றங்கள் அவளுக்கு உகந்தனவாகத் தோன்றவில்லை. நாகரிகப்

வளர்த்துவிட்ட பல பண்புகள் அவளுக்கு திருப்தி தரவில்லை தான். தனது பெண்கள் தலைமுடியைக் குட்டையாகக் கத்தரித்துக் கொண்டு திரிந்ததும், கையில்லாத ரவிக்கை அணிந்து காட்சி அளித்ததும் அவளுக்குப் பிடிக்கவில்லைதான். ஆனாலும் அவள் வாய்திறந்து தனது ஆட்சேபணைகளைச் சொன்னதில்லை.

ராணி நேருவின் அக்காள் ஒருத்தி அவர்கள் குடும்பத்திலேயே வாழ்ந்து வந்தாள். எல்லோரும் அவளை 'பீபி அம்மா' என்றே அழைப்பது வழக்கம். அவளுக்குப் பதின்மூன்று அல்லது பதினான்கு வயதிருக்கும் போதே, மணவினை முடிந்திருந்தது. பதினாறு வயதான போது அவள் கணவன் வீடு அடைந்தாள். ஒரு சில மாதங்களிலேயே கணவனைப் பறி கொடுத்தாள். நீந்திக் களித்து நீராடப் போன இளைஞனை மரணம் கொத்திக் கொண்டு போய்விட்டது. அவளுக்கு 'பால்ய விதவை' என்கிற அந்தஸ்து வந்து சேர்ந்தது. அன்று முதல் அவள் வாழ்வின் கொடுமைகளைச் சகித்து வந்தாள். வாழ்க்கைக் கனலிலே தன்னையே புடம் போட்டு மாண்புற்ற மாசிலாத் தங்கம் அவள். நேரு குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் அவளிடம் பேரன்பு உண்டு. தங்கை ராணியிடம் 'பீபி அம்மா'வுக்கு அபாரப் பிரியமும் பற்றுதலும் உண்டு அவளது குழந்தைகளிடம் பெரியம்மாவுக்குக் 'கொள்ளை ஆசை.'

விஜயலக்ஷ்மிக்கும் கிருஷ்ணாவுக்கும் எத்தனையோ கதைகள் சொல்லி உள்ளத்தைப் பண்படுத்திய பெருமை பீபி அம்மாவுக்கு உண்டு. மோகினிக் கதைகள், தெய்வக் கதைகள், வீரர்களைப் பற்றிய கதை

கள், இந்தியாவின் வீரநாயகர்கள் வீராங்கனைகள் பற்றிய கதைகள் பலவற்றையும் சொல்லி, குமரியர் உள்ளத்தில் வீர உணர்வைப் பயிரிட்டிருந்தாள் அவள். ராணி நேருவை விட, பத்து வயது மூத்தவள் பீபி அம்மா. 'பழங்காலத்து மனுஷி'. ஆகவே, புதுமைப் பெண்களின் போக்கு அவளுக்கு மனக்கஷ்டம் கொடுத்ததில் வியப்பில்லை. விஜயலக்ஷ்மியும் கிருஷ்ணா வும் புதுமை மோகம் அதிகம் கொள்ளாமல், புராதன தர்மங்களை அனுஷ்டித்திருக்கலாம் என்று பீபி அம்மா வும், ராணி நேருவும் அடிக்கடி ஆசைப்பட்டது உண்டு. ஆனால் கால ஓட்டத்தின் முன்னே அவர்கள் எண்ணம் ஓங்கி நிற்க முடியுமா என்ன! காலவேகம் ராணி நேருவை மகத்தான வீரநாயகியாக மாற்றிவிடும் வல்லமை பெற்றிருந்தது. அதைக் கண்டு அவளது கணவரும், மைந்தனும், பெண்களும் வியக்க வேண்டிய தாயிற்று.

இவ்வித வீரத் தாய்மார்களிடையே வளர்ந்து உளப்பண்பு பெற்ற விஜயலக்ஷ்மியும் காலத்தின் அழைப்பை ஏற்று, தாய்நாட்டின் விடுதலைப் போராட் டத்தில் முக்கியமான பங்கு கொள்ள முன்வந்தது இயல்பு தானே?

## அத்தியாயம் 7

1928-ம் ஆண்டில் மோதிலால் நேரு ஐரோப்பாவில் ஓய்வு பெற்றுக்கொண்டிருந்தார். கமலாவின் சிகிச்சைக் காக அங்கு சென்றிருந்த ஜவாஹரும், கிருஷ்ணாவும் 1927 டிசம்பரில் இந்தியாவுக்குத் திரும்பி விட்டதால்

தந்தை நேரு தனியாகத்தான் இருந்தார், அச் சந்தர்ப்பத்தில் விஜயலக்ஷ்மியும் ரஞ்சித் பண்டிட்டும் இரண்டாவது தடவையாக ஐரோப்பிய யாத்திரையை மேற்கொண்டனர்.

அப்பொழுது அவர்களுக்கு சந்திரலேகா, நயனதாரா எனும் குழந்தைகள் இரண்டு பேர் இருந்தனர். அச் சிறு பெண்களை ராணி நேருவின் பாதுகாப்பில் விட்டுவிட்டு, விஜயலக்ஷ்மி கணவருடன் ஐரோப்பா சென்றாள். குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு கிருஷ்ணவுக்கு ஏற்பட்டது. குழந்தைகளிடம் அவளுக்குப் பிரியம் அதிகம்தான். ஆயினும் அவர்களைக் கண்காணித்து, அவர்களது தேவைகளைக் கவனித்து வளர்ப்பது என்பது சிரமம் மிகுந்த தொல்லையாகத்தான் தோன்றியது கிருஷ்ணவுக்கு.

அந்த வருஷம் இந்தியாவில் நெடுகிலும் அரசியல் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்றன. மக்களிடையே புதிய விழிப்பும் புத்துணர்ச்சியும் ஏற்பட்டிருந்தன. அவர்கள் செயலிலே புதுச்சக்தியும் நெஞ்சுறுதியும் பிரதிபலித்தன. சத்தியாக்கிரக இயக்கம் வெற்றிகரமாக வளர்ந்து வந்தது. வேகமான அபிவிருத்தி காணப்படவில்லை ; ஆயினும் ஏதோ மகத்தான நிகழ்ச்சி ஒன்று திடீரென வெடிக்கலாம் என்று அனைவரும் எதிர்பார்த்து வாழ்ந்ததாகத் தோன்றியது. எந்த எதேச்சாதிகார சக்தியாலும் அணைபோட்டுத் தடுத்துவிட இயலாத தன்மையில் மக்களின் சக்தி உருவாகிக் கொண்டிருந்தது. அது ஆங்காங்கே மலர்ச்சியுற்ற

குடியானவர்களின் கிளர்ச்சிகள், இளைஞரின் இயக்கங்கள், சட்ட மறுப்பு வேலைகளில் எல்லாம் உயிர்மூச்சு காட்டியது. காங்கிரசின் பலம் பன்மடங்கு பெருகி ஓங்கியது.

எங்கும் மகாநாடுகள்; உறுதிப் பிரதிக்ஞைகள் பொதுநலப் பணிகள், எல்லோரும் தொண்டர்கள்— இந்த நிலை இந்திய நாட்டின் பரப்பு முழுவதிலும் வியாபித்திருந்தது. தொழில்களைத் துறந்தார்கள் பலர். பட்டங்களைத் துறந்தார்கள் பலர். பள்ளிப் படிப்பைத் துறந்தார்கள் மாணவ மாணவிகளில் எண்ணற்றோர். கிராமம் கிராமமாகச் சென்று தேசிய உணர்வை வளர்த்தார்கள். 'சுதந்திரம் நமது பிறப்புரிமை; அதை அடைந்தே திருவோம்' என்ற உறுதி எல்லோரது இதய ஒலியாகவும் மாறும்படி பணியாற்றினர் தொண்டர்கள். நம் நேருவும், அவர் தங்கை கிருஷ்ணாவும் இத்தகைய நாட்டுப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

மேல்நாடு சென்று திரும்பிய விஜயலக்ஷ்மியும் ரஞ்சித் பண்டிட்டும் நாட்டு நலனையே தங்கள் வாழ்க்கை லட்சியமாக ஏற்று, சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாகக் கலந்து தொண்டாற்றுவதில் உற்சாகம் காட்டினார்கள்.

காங்கிரஸ்காரர்கள் மறியல், ஊர்வலம் முதலியவைகளை வெற்றிகரமாக நடத்தி வந்தார்கள். அரசாங்கத்தினர் தடியடி தர்பாரை வெறித்தனமாக நிலைநாட்ட முயன்றார்கள்.

காங்கிரஸ் தலைவர்களிடையே மிதவாதமும் தீவிர வாதமும் முறைத்து நின்று பின் மோதத் தொடங்கி

விட்டது. பரிபூரண சுதந்திரமே நமது லட்சியம் என்பது தீவிரவாதிகளின் விடாப்பிடியான சுலோகமாக அமைந்தது. சர்வகட்சி மகாநாடு கூட்டவேண்டும்; பிரிட்டிஷார் மனமுவந்து அளிக்கத் தயாராக இருக்கும் புதிய அரசியல் திட்டத்தைக் கைநீட்டி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது மிதவாதிகளின் கருத்து.

ஜவாஹர்லால் தந்தையின் மிதவாதத்தை எதிர்த்தார். தந்தைக்கும் மகனுக்குமிடையே முன்பு எப்போதும் ஏற்பட்டிராத வகையில் பலத்த அபிப்பிராய பேதம் தடித்து நின்றது. அதனால் 'ஆனந்த பவன'த்தில் சோகம் கனத்துத் தொங்கியது. ஜவாஹரின் தாயும் விஜயலக்ஷ்மியும், கிருஷ்ணவும் வாய்விட்டுச் சொல்ல முடியாத அளவு வேதனையைச் சுமந்து வருந்தினர். அவர்கள் யாருக்காகப் பரிந்து பேசமுடியும்? தங்கள் பக்திக்கும் பாசத்துக்குமுரிய இருவரில் யாரிடம் அறிவுரை கூறிப் பயனைத் தவிர்க்க முடியும்?

அத்தகைய நெருக்கடியான கட்டத்தில் கல்கத்தா காங்கிரஸ் கூடியது. அதற்குத் தலைவர் மோதிலால் நேரு. அலகாபாத்திலிருந்து பெரிய கோஷ்டி கிளம்பிச் சென்றது தலைவருடன். ராணி நேரு, விஜயலக்ஷ்மி, கிருஷ்ண முதலியவர்கள் ரயில்வண்டித் தொடரில் விசேஷமாக இணைக்கப்பட்ட ஸ்பெஷல் போகிகளில் பிரயாணம் செய்து, கல்கத்தா நகரைச் சேர்ந்தார்கள். அந்தக் காங்கிரஸ் பிரமாத தடபுடல்களோடு நடைபெற்றது. தலைவருக்கு ராஜமரியாதைகள் காட்டினார்கள். சுபாஷ் போஸின் தலைமையில் இளைஞர் குதிரைப்படை ஒன்று அணிவகுத்து நின்றது; தலைவர் போகுமிடங்களுக்

செல்லாம் முன்னும் பின்னும் பாரா கொடுத்து நகர்ந்தது.

அவ்வளவு ஆர்ப்பாட்டமாக நடந்த மகாசபையின் மேடையிலே மகன் தந்தையை எதிர்த்து நின்ருர். 'குடியேற்ற நாட்டு அந்தஸ்து' எனும் கொள்கையை வற்புறுத்துவதற்காக சர்வகட்சி மகாநாடு கூட்டவேண்டும் என்று கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஜவாஹர்லால் எதிர்த்தார். என்ருலும் தீர்மானம் நிறைவேறியது. அதுமட்டு மல்ல. ஜவாஹர்லால் நேருவையே காங்கிரசின் பொதுக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

1929-ம் வருஷம் நேரு குடும்பத்தினருக்கு அதிக உற்சாகமும் பெருமையும் அளித்தது. அவ்வருஷத்திய காங்கிரஸ் லாகூரில் கூடியது. அதற்கு ஜவாஹர்லால் நேரு தான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'இது அரியதொரு நிகழ்ச்சி. காங்கிரஸின் சரித்திரத்திலேயே இதுவரை இத்தகைய நிகழ்ச்சி ஏற்பட்டதில்லை. காங்கிரஸ் போன்ற தேசீய ஸ்தாபனத்தில் தந்தைக்குப் பிறகு மகன் என்ற முறையில் தலைமைப் பொறுப்பை ஏற்பது, உலகத்தில் எங்குமே எப்பொழுதுதாவது ஏற்படக் கூடிய அரிய வாய்ப்பாகத்தான் இருக்க முடியும். அடிக்கடி சகஜமாக நடைபெறக் கூடிய சம்பவம் அல்ல இது' என்று நேரு குடும்பத்தினர் அகமகிழ்ந்தார்கள். நாட்டு மக்கள் இந்த அரிய வாய்ப்பை எண்ணி எண்ணி, எடுத்துப் பேசி, உளம் களித்தார்கள்.

அக் காங்கிரஸ் மிகச் சிறப்பான முறையில் நடந்தது தனது சொத்துக்குத் தனி வாரிசான ஜவாஹர்

அரசியல் பொறுப்புகளிலும் தனக்குச் சரியான வாரிசு தான் என்ற பெருமையோடு, ஆனந்தப் பெருக்குடன், தந்தை மகனிடம் தலைமைப் பதவியை அளித்தார். நாட்டு நலம் கருதும் மன்னன் இளவரசுக்குப் பட்டம் சூட்டியது போலிருந்தது அந்தக் காட்சி.

இச் சம்பவத்தினால் மாத்திரமே தனித்துவம் பெற்றுவிட வில்லை லாகூர் காங்கிரஸ். பஞ்சாப்பில் ரவி நதிக் கரையிலே கூடியிருந்தது மகாசபை. எலும்புக் குருத்தையும் தொட்டுத் தடவிக் கிசுகிசு மூட்டும் கடுங் குளிர் எங்கும் நிலவியது. பனி மலிந்த டிசம்பர் மாதத் தின் அதிகாலை நேரத்தில் ஆயிரமாயிரம் பேர்கள் ஒருங்கு கூடி, ஒரு மனமாய்—ஒரே குரலாய் 'சுதந்திரப் பிரதிக்ஞை'யை மேற்கொண்டார்கள்.

வாலிப சமுதாயத்தின் லட்சியத் தலைவரான ஜவா ஹர்லால் நேரு பதவி ஏற்ற காங்கிரஸில், சுதந்திரப் பிர திக்ஞை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் மூலம் இந் திய சரித்திரத்தில் புதுயுகம் பிறந்தது என்றே மக்கள் நம்பினார்கள். கீழ்வானிலே உதயத்தின் பொன் ரேகை கள் தொட்டுத் தடவி ஒளிபூசி முன்னேறும் புனித வேளையில், தலைவர் ஜவாஹர் சுதந்திரப் பிரதிக்ஞையை உரத்த குரலில் படித்தார். ஆண், பெண், சிறுவர் என்ற பேதமற்று எல்லோரும் உள்ளத்தின் உணர்ச்சிப் பெருக் குடன் கலந்து அதை உச்சரித்தார்கள். அதை நிறை வேற்றியே தீருவோம், என்ற உறுதியோடு கலைந்தார்கள். அதற்காக எவ்விதக் கொடுமைகளையும் துயரங்களையும் சகித்துத் தலை நிமிர்ந்து சமரிடுவோம் என்று துணிந்தார் கள்.

விஜயலக்ஷ்மியும், கிருஷ்ணாவும் அண்ணா நேரு காட்டும் வழியில் வீரமுடன் முன் செல்வது என்ற விரதம் கொண்டனர். எதிர்காலம் மனோகரமாக இராது ; காரிருளும் கொடுமை பலவும் நிறைந்து அச்சமெழுப்பும் சூழ் நிலையே காணப்படுகிறது என அவர்கள் உணர்ந்தார்கள். ஆயினும், மனம் தளர்ச்சியுற வில்லை. உண்மையில், விவரிக்க இயலாத ஓர் வகைத் துணிச்சல் தான் அவர்கள் உள்ளத்தில் இடம் பெற்றிருந்தது.

பலவகைகளிலும், அவர்கள் வாழ்க்கையில் புது அத்தியாயந்தான் ஆரம்பமாகி யிருந்தது.

லாகூர் காங்கிரஸ் கூடுவதற்குச் சில மாதங்கள் இருந்த போதே, மோதிலால் நேரு தமது பெரிய மாளிகையை நாட்டின் பொதுச் சொத்தாக மாற்றி. காங்கிரஸிடம் ஒப்படைத்தார். நேரு குடும்பத்தின் 'ஆனந்த பவனம்' இந்தியாவின் 'சுயராஜ்ய பவனம்' ஆகிவிட்டது.

மோதிலால் நேரு ஜவாஹர் குடும்பத்துக்காகப் புதிதாக ஓர் வீடு கட்டியிருந்தார். அருமையான இல்லம் அது. தந்தைக்கு மகிழ்வும் பெருமையும் தரும் வகையில் அமைந்த கட்டிடம் அதில் நேரு குடும்பத்தினர் குடி புகுந்தனர். அந்தப் புது வீடு 'ஆனந்த பவனம்' என்ற பெயரையே ஏற்றது. தாம் எந்த வீட்டில் வசித்தாலும், அது 'ஆனந்த பவன'மாகத் தான் விளங்க வேண்டும் என்பது மோதிலாலின் ஆசையாம்.

## அத்தியாயம் 8.

'உப்பு' என்கிற சொல் 'மந்திரம் போல்' மாறியது 1930-ம் ஆண்டிலே.

'உப்புக்கு வரி' என்றது அரசாங்கம்.

'உப்புச் சொத்து, உங்க வீட்டு அப்பன் சொத்தா?' என்று பொங்கி எழுந்தனர் இந்தியர். அவர்களுக்கு வழி வகுத்துக் காட்டினார் மகாத்மா காந்தி.

நாட்டு நிலைமை, மக்களின் மனப்பண்பு, கால நிலை இவைகளைச் சீர்தூக்கி, சரியாக எடைபோடக் கற்றிருந்த காந்திஜீ ஜனசக்தியைப் பயன்படுத்தி ஆட்சியினரை எதிர்க்க அதுதான் தக்க தருணம் என்று கணித்திருந்தார். அதற்கு சர்க்கார் புகுத்த விரும்பிய 'உப்பு வரி' பயன்பட்டது.

'சட்டத்தை எதிர்ப்போம். வரி கொடோம். உப்புக் காய்ச்சுவோம்' என்றார் காந்திஜீ. சாத்வீகமான மறியலுக்கான பயிற்சி நாட்டு மக்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது. ஆண்கள் மட்டுமல்ல; வீட்டினுள் பொழுது போக்கி வாழ்ந்து பழகிய பெண்களும் ஆயிரக் கணக்கில் தொண்டர் படையில் சேர்ந்தார்கள்.

கமலா நேருவும், கிருஷ்ணாவும் ராணுவ வீரர்கள் மாதிரி உடுப்பு அணிந்து தொண்டர் படைப் பயிற்சி பெற்றார்கள்.

1930 மார்ச் 12-ம் நாள் காந்திஜீ உலகப் பிரசித்தி பெற்ற 'தண்டி யாத்திரையைத் தொடங்கினார். அவ

ரும், தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரும், உப்பு காய்ச்சி சட்டத்தை மீறினார்கள். காந்தி கைது செய்யப்பட்டார்.

இந்தியா பூராவும் சத்தியாக்கிரக இயக்கம் உயிர் பெற்றது. பல இடங்களில் தலைவர்கள் சட்டத்தை எதிர்த்து, உப்பு காய்ச்சி, சிறை சென்றார்கள்.

எங்கும் மறியல்-ஊர்வலம்-சொல்மாரி. பதிலுக்கு தடியடி-சிறைவாசம்-அபராதம்!

அலகாபாத்தில் 'உப்பு சத்தியாக்கிரகம்' செய்து ஜவாஹர்லால் நேரு தண்டனை பெற்றார். அவ்வளவு தான். நாட்டிலுள்ள நகர்களும் கிராமங்களும் சீற்றம் கொண்டு எழுந்துவிட்டது போல, தங்களுக்கு மறுக்கப் பட்ட உரிமையை மீண்டும் பெறப் பாய்ந்தது போல, செயல் புரியத் துணிந்தன. திகைத்துத் திணறிய அரசாங்கம் தடியடி—துப்பாக்கிப் பிரயோகம்—ஜெயில் தண்டனை என்று வீசி 'கப்சிப் தர்பார்' நடத்த முனைந்தது. எனினும் மக்களின் உணர்வை ஒடுக்கிவிட இயலவில்லை.

இப் போராட்டங்களின் போது, இந்திய நாட்டின் பெண்மணிகள் காட்டிய திரம் போற்றுதலுக் குரியது. திகைக்கச் செய்வது. அக்காலத்தில் யாரும் எதிர்பார்த்திராத எழுச்சி அது.

கமலா, கிருஷ்ணா, விஜயலக்ஷ்மி போன்றவர்கள், வீட்டில் மலர்கள் போலவும் மெல்லிய பூங்கொடிகள் போலவும் வாழ்ந்து பழகியவர்கள், சுட்டெரிக்கும் வெயிலைப் பொருட்படுத்தாமல் வீடு வீடாகச் சென்று,

வீதி வீதியாக அலைந்து. தேச பக்திக்கனல் பொங்கிப் பரவுவதற்காக உழைத்தார்கள். அவர்கள் அப்படி அதிக உற்சாகத்துடன் அலைந்து திரிந்து பணியாற்றியது தந்தை நேருவுக்குக் கூட அதிசயமாகத்தான் தோன்றியது. அவருக்கு அது பிடிக்கவுமில்லை. ஆயினும், அவர் தனது குடும்பத்தினரைக் கண்டித்து கட்டுப்பாடுசெய்து அவர்களை ஒடுக்கிவிட விரும்பவில்லை.

மோதிலால் நேரு அப்பொழுது வியாதியால் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு ஓய்வு தேவை என்று டாக்டர்கள் சிபாரிசு செய்தனர். 'அவருக்கு ஓய்வு ஜெயிலில் நிறையக் கிடைக்கும்' என்று சொல்ல விரும்பியது போல, அரசாங்கம் அவரைக் கைது செய்தது.

நாட்டிலே பரவி நின்ற சுதந்திர ஆர்வமும், கமலா—கிருஷ்ணா ஆகியோரின் சேவையும் விஜயலக்ஷ்மிக்கு அதிக ஊக்கம் கொடுத்தன. அவளும் ஊர் ஊராகச் சென்று பிரசாரம் புரியலானாள். அரசாங்கத்தின் அடக்குமுறையை எதிர்த்து எங்கும் கர்ஜனை செய்து வந்தாள்.

தலைவர்களையும் தொண்டர்களையும் லட்சக் கணக்கில் சிறைகளுக்குள் தள்ளிய அரசாங்கம் பெண்களைக் கைது செய்யத் தயங்கியது. ஆகவே, வெறும் எச்சரிக்கைகளையும் தடைகளையும் காட்டி மிரட்டியது. விஜயலக்ஷ்மி பொதுஜன இயக்கத்தில் பங்கு கொள்ளாமல் ஒரு மாத காலம் ஒதுங்கி வாழ வேண்டும் என்று உத்திரவிட்டது. ஆனால், அவ் வீராங்கனை அதைச் சட்டை செய்ய வில்லை.

தலைவர்கள் பலரும் ஜெயிலினுள் அடைபட்டுக் கிடந்ததால், 'நாட்டில் என்ன நடக்கிறது; ஏன் இந்த இயக்கம்; அரசாங்கம் எதற்காக எல்லோரையும் சிறையில் தள்ளுகிறது; நமது லட்சியம் என்ன?' என்பன போன்ற பிரச்னைகளை நாட்டினருக்கு எடுத்துச் சொல்லி விளக்க வேண்டியது தன் கடமை எனக் கொண்டாள் விஜயலக்ஷ்மி. பொதுமக்கள், மாணவர்கள், விவசாயிகள் கூட்டங்கள் என்று பலப்பல இடங்களில் பேசினாள். கூட்டத்துக்குத் தக்கபடி, சந்தர்ப்பத்துக்கு ஏற்ற முறையில், எல்லோருக்கும் விளங்கக் கூடிய வகையில் சொல் விருந்து அளித்து வந்தாள் அவள். இனிமையான குரல்; கவர்ச்சிகரமான உச்சரிப்பு, ஆழ்ந்த கருத்து, உணர்ச்சியும் வேகமும் கலந்த பேச்சு—எல்லாம் கூடி அவளுக்கு 'நல்ல பிரசங்கி: திறமையான பேச்சாளி' என்ற சிறப்பை ஏற்றுத் தந்தன.

## அத்தியாயம்—9.

பத்து வாரங்களுக்குப்பிறகு சிறையிலிருந்து மீண்ட மோதிலால் நேருவின் உடல் நிலை மிகுதியும் சீர்கேடு அடைந்து விட்டது. மிகவும் மெலிந்து காணப்பட்டார் அவர். அவரது தேகநலனை உத்தேசித்து நேரு குடும்பத்தினர் முசௌரி எனும் மலை வாசஸ்தலத்தில் முகாமிட்டனர். மலைக்காற்றும், அமைதியான சூழலும், ஓய்வும், மனைவிமக்களின் போஷிப்பும் அவரது உடலுக்குத் தெம்பு ஊட்டி வந்தன.

இடைக்காலத்தில் ஜவாஹர்லால் நேருவும் விடுதலை அடைந்திருந்தார். அவர் அலகாபாத்தில் தங்கியிருந்தார்.

அடிக்கடி நேரு தந்தையைக் கண்டு திரும்பியது மோதிலாலுக்கு ஆறுதலாக இருந்தது.

ஆனால், அரசாங்கம் ஜவாஹரைத் தொடர்ந்து வெளியே விட்டிருக்க விரும்பவில்லை. மறுபடியும் அவரைக் கைது செய்து நைனி ஜெயிலில் பூட்டி வைத்தது. இச் செயல் தந்தை நேருவுக்குப் பெரிய அதிர்ச்சியாக அமைந்தது.

அவர் உடலம் தளர்வுற்ற நிலையில்தான் இருந்தது. பூரண குணம் எய்திவிட வில்லை. மகனுடன் பல விஷயங்களைப் பேசி மகிழலாம் என்ற ஆசையோடு அவர் அலகாபாத்துக்குத் திரும்பியிருந்தார். பொதுக்கூட்டம் ஒன்றில் பேசச் சென்றிருந்த ஜவாஹர் திரும்பி வந்து விடுவார் என்று ஆவலுடன் காத்திருந்த தந்தைக்கு மகன் கைது செய்யப்பட்ட விவரம் தான் கிட்டியது. இதய வேதனையுடன் அவர் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.

ஆனாலும் மனமொடிந்து ஒடுங்கி விடக்கூடியவரா மோதிலால்? 'சிங்க உள்ளம்' அவருடையது. சீறி எழுந்தார் அவர். 'உள்ளம் இளமையோடு இருக்கின்ற போது, உடல் நோய் எந்த மூலைக்கு? அடிமை ஆட்சியை பலமாக எதிர்த்துப் போராடுவேன்' என்று கர்ஜித்தது அவர் மனம். அதிதீவிரமாக அரசியல் பணியில் ஈடுபட்டார்.

மனோவலிமையால் புதிய பலம் பெற்று ஆவேசத்தோடு செயல்புரிந்த மோதிலாலின் ஊக்கமும் உணர்வும் எல்லோரையும் வியந்திட வைத்தது. ஆனால் அவரால் வெகுகாலம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அவர் தேக

நிலை மோசமாய், மோசமாய், மிக மோசமாய் போய்க் கொண்டிருந்தது.

ஜவாஹர்லால் நேரு பலமுறை வற்புறுத்தியதன் பேரில் தந்தை ஓய்வு பெற இசைந்தார். கடல் யாத்திரை சென்று மேல் நாடுகளில் சிலகாலம் தங்கலாம் என்று திட்டமிட்டார்கள். தந்தையுடன் கிருஷ்ணவும் செல்வதாக இருந்தது. அவர்கள் கல்கத்தா நகர் அடைவதற்குள் தேகநிலைமை படுமோசமாகி விட்டதால், பிரயாணம் ரத்து செய்யப்பட்டது.

சில வார காலம் மோதிலால் கல்கத்தா நகரை அடுத்த ஒரு ஊரில் தங்க நேர்ந்தது. அச் சமயத்தில் கமலா நேரு கைது செய்யப்பட்டாள் என்ற செய்தி கிட்டியது. தந்தை நேரு மிகவும் வருத்தமுற்றார். பலவீனமான நிலையில் உள்ள கமலா கடுஞ்சிறையில் எப்படி வாழமுடியும் என்று வேதனை அடைந்தார் அவர். உடனடியாக அலகாபாத்துக்குக் கிளம்பிவிட்டார்.

அவருடைய நிலைமை கவலைக்கிடமானதும், அரசாங்கம் ஜவாஹரையும், ரஞ்சித் பண்டிதரையும் விடுதலை செய்தது. அது நிகழ்ந்தது 1931 ஜனவரி 26-ம் தேதி.

அன்றைய தினம் மற்றும் அநேக பிரபல தலைவர்களும் விடுதலை பெற்றனர். காந்திஜீயும் விடுவிக்கப் பெற்றார். அவர் நேராக மோதிலாலைக் காணவந்தார். அங்கேயே தங்கினார். அவர் அருகிலிருந்தது மோதிலாலுக்கு எவ்வளவோ ஆறுதல் கொடுத்து வந்தது.

மரணப்படுக்கையில் கிடந்த தலைவரைக் காண எவ்வளவோ பேர் வந்து போயினர். ஆயினும் அந்த வீட்டி

லே சோகமும் கவலையும் தான் நிலைத்து நின்றன. ஆனால் மோதிலால் சாவைக் கண்டு அஞ்சவில்லை. காந்திஜியுடனே, அல்லது ராணி நேருவுடனே, அடிக்கடி தமாஷாகப் பேசிக் களித்தார்.

ஜவாஹர், ராணி நேரு, கமலா, விஜயலக்ஷ்மி, கிருஷ்ணா எல்லோரும் சதா அவரைச் சுற்றி அமர்ந்து கவலையோடு கவனித்து வந்தார்கள். சரியான ஊண் உறக்கமின்றி சிச்ருஷை செய்து வந்தார்கள். இரவிலே முறை வைத்துச் சற்றே கண் அயர்ந்து காத்துக் கிடந்தார்கள்.

வாழ்க்கையில் எத்தனையோ போராட்டங்களில் எதிர்த்து நின்று வெற்றி கண்ட மோதிலால் மரணத்தோடு நடத்திய சமரில் ஜெயிக்க முடியவில்லை. எக்ஸ்ரே சிகிச்சை செய்யும் நோக்கத்துடன் டாக்டர்கள் அவரை லக்ஷ்மணபுரிக்கு எடுத்துச் சென்றார்கள். அங்கு பிப்ரவரி ஆறும் தேதி அவர் மரணம் அடைந்தார். அவரது தேகம் அலகாபாத்துக்கு எடுத்துவரப் பெற்று கங்கைக் கரையிலே தகனம் செய்யப்பட்டது.

அன்று நாட்டு மக்கள் கண்ணீர் சிந்தினர். தலைவர்கள் பலரும் தாங்கள் பெருநஷ்டம் அடைந்து விட்டதாகப் பேசித் துயர் அடைந்தனர். ஜவாஹரும், விஜயலக்ஷ்மியும், பிறரும் ஈடு செய்ய முடியாத பெரிய இழப்பு காரணமாக ஆற்ற இடலாத் துயர் எய்தி வாடினார்கள்.

தந்தை, நாட்டின் சுதந்திரம் காணத் தவித்தார். சுதந்திர இந்தியாவில் தான் மரணமடைவேன் என்று சொல்லி வந்தார். மரணம் முந்திக் கொண்டது. அவர் ஆத்மா சாந்தி அடையும் வகையில் நாம் தேசப்பணி

புரிந்து, நாட்டுக்கு விடுதலை தேடித் தருவோம்' என்று உறுதி கொண்டார்கள் அவர்கள்,

## அத்தியாயம்—10

ஆங்கிலேயர் காங்கிரசுடன் அரசியல் பேரம் பேசிக் காலம் தள்ளினர். வைஸிராய் இர்வின் பிரபு காந்திஜி யுடன் ஒப்பந்தம் செய்ய இசைந்தார்.

எனினும் ஒப்பந்தத்தை கௌரவிக்கும் எண்ணம் ஆட்சியினருக்குக் கிடையாது என்பதை நாட்டு நிகழ்ச்சிகள் நிரூபித்தன. மறுபடியும் கைது செய்வதும் தடியடி கொடுப்பதும் சகஜமாகி விட்டது.

1931 டிசம்பரில் ஜவாஹர் கைது செய்யப்பட்டார். சில தினங்களிலேயே காந்திஜீ, வல்லபாய் பட்டேல் ஆகியோரையும் அரசாங்கம் சிறையில் அடைத்தது. அவற்றின் விளைவாக இந்தியாவின் மூலைக்கு மூலை கிளர்ச்சிகளும், மறியல்களும் தலைதூக்கின.

முன்னர் ஆர்வத்துடன் பணியாற்றிய பெண்கள் மறுபடியும் முன்னணிக்கு வந்து போராடினார்கள். முன்பு தயங்கி நின்ற பெண்கள் இப்போது தீவிர உற்சாகத்துடன் இயக்கத்தில் கலந்து கொண்டனர். அவர்கள் காட்டிய ஆர்வத்துக்கும் வலிமைக்கும் ஓர் அளவே கிடையாது.

விஜயலக்ஷ்மியும் கிருஷ்ணாவும் போராட்டத்தில் முக்கிய பங்கு பெற்றுத் திகழ்ந்தார்கள். அவர்களின் தாய் ராணி நேரு கூட வியக்கத்தக்க வகையிலே செயல்

புரிந்தாள். வயதின் முதிர்ச்சியும் உடலின் தளர்ச்சியும் பெற்றுவிட்ட ராணி நேரு — அன்றாட வாழ்வை நோயற்ற முறையில் கழிக்க இயலாது அவதியுற்ற தாய்— அற்புதமான சக்தியும், மனோதிடமும் பெற்று விளங்கினாள். தனது புதல்வியரைப் போல் சமரிலே தலை நிமிர்ந்து முன்னேறினாள். சில சமயங்களில் அவளுடைய ஆர்வமும் சேவையும் விஜயலக்ஷ்மி, கிருஷ்ணா ஆகியோரின் உற்சாகத்தையும் உழைப்பையும் மிஞ்சி நின்றன.

அரசாங்கம் கையைக் கட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டா இருக்கும்? விஜயலக்ஷ்மிக்கும் கிருஷ்ணாவுக்கும், மற்றும் சிலருக்கும், தடை உத்திரவு போட்டது. பொதுக் கூட்டங்களில் பேசக் கூடாது; ஊர்வலங்களில் கலந்து கொள்ளக் கூடாது; மறியல்களில் பங்கு பெறக் கூடாது என்றெல்லாம் விதி விதித்தது.

சுதந்திர தினம் வருகிற வரை சும்மா இருக்கலாம் என்று நேரு சகோதரிகள் தீர்மானித்தனர். ஜனவரி 26-ம் தேதி வந்தது. 'நாங்கள் ஒடுங்கி விடவில்லை; பயந்து பதுங்கவுமில்லை' என்று அவர்கள் உணர்த்த முன் வந்தார்கள்.

அலகாபாத்தில் அதுவரை நடந்திராத அளவு பெரிய கூட்டம் ஒன்று கூட்டினார்கள். ராணி நேரு தான் தலைமை வகித்தாள். அனல் தெறிக்கும் உணர்ச்சிப் பிரசங்கம் நிகழ்த்தினாள். கூட்டம் இனிது முடிவுறுதபடி அரசாங்கம் கவனித்துக் கொண்டது. குண்டாந்தடிகளை மனிதர் மண்டையில், உடலில், கண்ட கண்ட இடமெலாம் நடனமாட ஏவியது! அந்த இடத்திலேயே

பலரைக் கைது செய்தார்கள். பலத்த காயம் பெற்றவர் களின் தொகையும் பெரிது தான்.

தங்களுக்கு விதித்த உத்திரவை மீறிவிட்ட குற்றத் துக்காகத் தாங்களும் கைது செய்யப்படுவர் என்று விஜயலக்ஷ்மியும் கிருஷ்ணாவும் உற்சாகத்தோடு எதிர் நோக்கி நின்றார்கள். ஏமாற்றம் அடைந்தார்கள். வருத் தத்துடன் வீடு திரும்பினார்கள்.

ஆனால் அது தற்காலிகமான எமாற்றம்தான் என் பது மறுநாள் காலையில் விளங்கிவிட்டது. அன்று காலை 9-30 மணிக்கு அக்காளையும் தங்கையையும் அழைத்துப் போவதற்காக இன்ஸ்பெக்டர் சகிதம் போலீஸ் கார் வீடு தேடி வந்தது. விஜயலக்ஷ்மியும் கிருஷ்ணாவும் உவகை யுடன் சிறை சேர்ந்தனர்.

இருவருக்கும் அப்பொழுது தான் முதல் சிறை அனுபவம் கிட்டியது. இருவருக்கும் தங்களைப் பற்றிய கவலை ஏற்படவில்லை. அச் சந்தர்ப்பத்திலே, தங்கள் எதிர்காலம் எப்படி அமையுமோ என்ற அச்சம் பிறக்க வில்லை அவர்கள் உள்ளத்திலே. தங்கள் தாயாரைப் பற் றிய நினைப்பு தான் வேதனையுடன் தலை தூக்கி நின்றது அங்கு.

ஒரு காலத்தில் ஆனந்தமும் ஆரவாரமும் ஜனப் பெருக்கமும் நிறைந்து ராஜகளையுடன் விளங்கிய பவ னம். பிறகு துயரமும் சோகமும் அமைதியுமே கவிந்து தொங்கிய பெரிய வீடு. அங்கே, வயது முதிர்ந்த அன்னை யைத் தன்னந்தனியளாக விட்டுச் செல்கிறோமே என்ற வருத்தம் தான் மகளிர் இருவருக்கும் ஏற்பட்டிருந்தது.

அந்த அன்னை, தன்னிலும் வயது முதிர்ந்த சகோதரி 'பீபி அம்மா'ளுடன், தனித்து விடப்பட்டாள். ஆயினும் அவள் உள்ளம் கூனிக்குறுகி விடவில்லை. வீரமாக லட்சியப் பணி புரிய அவள் தயங்கவு மில்லை.

விஜயலக்ஷ்மியும் கிருஷ்ணாவும் ஜில்லாச் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு முக மலர்ச்சியுடனும் ஆனந்தக் களிப்புடனும் காத்திருந்த தோழியர் பலரைக் கண்டு மகிழ்ந்தார்கள். என்ன வந்தாலும் சரி; புன்னகையோடு வரவேற்போம் என்ற தீர்மானத்துடன் அவர்கள் காத்திருந்தார்கள்.

வழக்கத்திற்கு விரோதமாக, பெண்களை விசாரணை இல்லாமலே பல வாரங்கள் கொட்டடிகளில் அடைத்து வைத்திருந்தனர் ஆட்சியினர். ஒரு மாதிரியாக விசாரணை நாளும் வந்தது. 'மிஞ்சிப் போனால், ஆளுக்கு ஆறு மாதம் சிறைவாசம் என்று தண்டனை விதிப்பார்கள்' என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்து இருந்தனர்,

ஜெயிலில்தான் விசாரணை நடந்தது. எல்லோரும் வரிசையாக உட்கார்ந்திருந்தனர். பெயர் சொல்லப்படும்; விசாரணை நடக்கும். கைது செய்யப்பட்டவர்கள் இந்த நாடகத்தில் கலந்து கொள்ள மறுத்துவிட்டனர்.

முதலாவதாக விஜயலக்ஷ்மி பண்டிட்டின் பெயர் தான் வாசிக்கப்பட்டது. மாஜிஸ்ட்ரேட் தீர்ப்பை வாசித்தார். ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனை; அபராதம் வேறு என்றார். எல்லோரும் திடுக்கிட்டார்கள்.

தண்டனைப் பட்டியல் தொடர்ந்து வாசிக்கப் பட்டது.

கிருஷ்ணுவுக்கு ஒரு வருஷம் சிறை. அபராதம் கிடையாது. இப்படி ஒவ்வொருவருக்கும் கிடைத்தது. மற்றும் இரண்டே இரண்டு பெண்களுக்குத் தான் ஒரு வருஷ தண்டனை. இதரர்களுக்கு விதம்விதமாக தண்டனை விதிக்கப்பட்டது. மூன்று மாதங்களிலிருந்து ஒன்பது மாதங்கள் வரை தாவாரியாக சிறைவாசப் பரிசு வழங்கப்பட்டது!

விஜயலக்ஷ்மியும் கிருஷ்ணுவும் லக்ஷ்மணபுரி ஜெயி லுக்குக் கொண்டு போகப்பட்டனர். இரவோடு இரவாக அழைத்துச் செல்லப்பட்டார்கள் அவர்கள்.

மிகுந்த பனியும் குளிரும் கவிந்திருந்த அதிகாலை நேரத்தில், அவர்கள் உரிய சிறைச்சாலையினுள் புகுந் தார்கள். ஓங்கி நின்ற பெருஞ் சுவர்கள் உற்சாகத்துக்குச் சமாதி கட்டும் சூழ் நிலைபோல் விளங்கின. வெளி உலகத் தொடர்புக்கு முற்றுப்புள்ளி வைத்து அவர்களைத் தனி யான உலகுக்குள் தள்ளும் அந்த அமைப்பு அவர்கள் இதயத்தில் பாரம் ஏழுப்பத்தான் செய்தது. சிறை வாசம் என்றால் என்ன; அது எத்தகைய கொடுமையாக இருக்கும் என்பதை அவர்களால் அப்போதுதான் முதன்முதலாக உணரமுடிந்தது.

இருப்பினும், இச் சூழ்நிலையால் உள்ளத்து உறுதி தளர்ச்சி பெறக்கூடாது; அப்படிச் சோர்வுற விடோம் என்ற மனோதிடம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. சிறைவாசத்தின் போது எத்தனையோ புறக்கஷ்டங்களை யும், அகத்துயரங்களையும் அவர்கள் அனுபவிக்க நேர்ந் தது. ஆயினும் விஜயலக்ஷ்மியும் கிருஷ்ணுவும் தைரி

யத்தை இழந்து விடவில்லை. தலைவரிடமும் லட்சியத்தி லும் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை, எதையும் சகித்துக் கொள்வதற்கு வலிமை தரும் சக்தியாக விளங்கியது.

போராடும் பண்பு பெற்ற வீராங்கனைகள் சிறை யினுள்ளும் கிளர்ச்சிகள் செய்வரோ ; சிறை விதிகளை அனுஷ்டிக்காமல் முரண்டு பிடிப்பார்களோ என்ற அச்சம் சிறைப் பாதுகாவலர்களுக்கு இருக்கத் தான் செய்தது. அவர்கள் விஜயலக்ஷ்மி, கிருஷ்ணா முதலியவர் களிடம் கண்ணியமாகவே நடந்து கொண்டனர். சகோ தரிகள் கோரிய பொருள்கள் அவர்களுக்குக் கிடைக்கும் படி ஏற்பாடு செய்தார்கள்.

சிறை அதிகாரி, அவர்களுக்கு ஏதாவது தேவைப் படுமானால் தெரிவிக்கலாம் என்று சொன்னார் ஒரு சமயம். ஒவ்வொருவரும் தனக்குத் தேவையான புத்த கங்கள் அல்லது பொருள்களைக் குறிப்பிட்டார்கள். கிருஷ்ணா கிடைத்த காலத்தைப் பொன்னாக்கும் ஆசை யோடு அயல் மொழிகளைக் கற்க விரும்பினாள். ஆகவே, பிரஞ்சு, இத்தாலிய பாஷைப் புத்தகங்கள், 'ஷார்ட் ஹேண்டு' புத்தகங்கள் சில, மூன்று டிக்ஷ்னரி முதலியன வேண்டும் ; இவை தவிர பொழுது போக்கிற்குத் துணை புரியும் நாவல்களும் தேவை என்று சொன்னாள்.

அவள் வேடிக்கையாகச் சொல்லவில்லை தனக்கு அவசியம் என்று பட்டதை எடுத்துச் சொன்னாள். அவ் வேளையில், தான் ஒரு அரசியல் கைதி ; டிக்ஷ்னரிகளை யும் சேர்த்து ஆறே ஆறு புத்தகங்கள் தான் அனுமதிக்கப் படும் என்கிற பிரக்ஞை அவளுக்கு இல்லவே இல்லை,

அதிகாரி யோசனையில் ஆழ்ந்துவிட்டார். பிறகு சொன்னார் : ' உங்களுக்காக சிறு லைபிரரி ஒன்றை சிறைக்குள் ஏற்பாடு செய்து விட்டால் மிகச் சௌகரியமாக இருக்கும்; இல்லையா? உங்களுக்குத் தேவையான புத்தங்களை நீங்களே தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம். அதற்காக மேலிடத்தில் அனுமதி பெற்று ஆவன செய்யட்டுமா?'

அவர் விளையாட்டாகப் பேசவில்லை. கர்ம சிரத்தையாகத் தான் கேட்டார். ஆனால், கிருஷ்ணா பதில் சொல்லத் தயங்கினாள். அதிகாரியின் முகத்தையே கவனித்து நின்றாள். அவர் கண்களில் புன்னகைப் பொலிவு பூத்து நிற்பதை உணர்ந்து உற்சாகத்தோடு பதில் அளித்தாள்

' உங்களுக்கு மிகுந்த தொந்தரவாகத் தோன்றவில்லை என்றால் அப்படியே செய்யுங்கள். அது மிக இனிய ஏற்பாடாக இருக்கும். பாருங்கள், இங்கே நூல் நூற்று வீண் பொழுது போக்குவதை நான் விரும்பவில்லை. ஆகையினால், எனக்குச் சீக்கிரமே புத்தகங்கள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்தால் நல்லது' என்றாள் அவள்.

அந்த அதிகாரி எவ்வளவோ முயற்சி செய்து, கிருஷ்ணாவுக்குத் தேவையான புத்தகங்களை வரவழைத்துக் கொடுத்தார். அவை வருவதற்கு இரண்டு மாதங்கள் பிடித்தன.

ஜெயிலில் வாழ நேர்ந்த பெண்களுக்கு ஆளுக்கு ஆறு சேலைகளும் வேறு சில உடுப்புகளும் தான் அனுமதிக்கப்பட்டிருந்தன. தினந்தோறும் துணிகளை அவ

ரவர்களே துவைத்து உலர்த்த வேண்டியிருந்தது. விஜய லக்ஷ்மிக்கும் கிருஷ்ணவுக்கும் இந்த வேலை மிகுந்த சிரம மாகத் தான் இருந்தது. இயல்பாகவே கனமான கதர்ச் சேலை நீரில் நனைக்கப்பட்டது 'செக்கு கனம்' கனப் பதை அவர்கள் உணர்ந்தார்கள். என்றாலும் கொஞ்ச நாளில் பழக்கமாகிவிட்டதும் சரியாகப் போயிற்று.

சிறை வாழ்க்கையின் கஷ்டங்கள் பலவும் பழகப் பழகச் சரியாகிவிட்டன அவர்களுக்கு. ஆயினும் உண வுப் பிரச்னை தொல்லை தரும் பெரிய பிரச்னையாகத் தான் இருந்தது. ஜெயிலில் தரப்பட்ட உணவு வகை கள் பிடிக்காமல் போனதால். பெண்கள் தாங்களாகவே சமையல் செய்து சாப்பிட அனுமதி பெற்றுக்கொண் டனர்.

விஜயலக்ஷ்மி ரொட்டி சாப்பிடுவதில் திருப்தி கண்டாள். அவளுக்குச் சாப்பாட்டைவிடக் காப்பிதான் அத்தியாவசியத் தேவை. சிறை விதிப்படி காப்பி அனு மதிக்கப்படுவதில்லை, அவளுக்குக் காப்பி தேவைப்படு மானால், நித்தியப் படிக்காசை மிச்சப்படுத்தி வாங்கிக் கொள்ளலாம் என்று சலுகை அளித்தார் சிறை அதி காரி. அவ்விதமே, சாப்பாட்டுக்குரிய காசைச் சேமித்து காப்பிப் பொடி வாங்குவதை வழக்கமாக்கிக் கொண் டாள் அவள்.

ஜெயிலின் கடுமையான அனுபவங்களை எல்லாம் அற்பமானதாகத் தோன்றச் செய்த சம்பவம் ஒன்று வெளி உலகில் நிகழ்ந்து விட்டது. அத்துயரச் செய்தி கேட்டு ஜவாஹர்லால் குமைந்து உளம் கொதித்தார்.

விஜயலக்ஷ்மியும் கிருஷ்ணுவும் வேதனையுடன் கண்ணீர் வடித்தார்கள். இரும்புக் கம்பிகளின் பின்னல் அடைபட்டுக் கிடந்த அவர்கள் வேறு என்ன செய்ய முடியும்?

1931 ஏப்ரல் மாதம் தான் அந்தச் சம்பவம் நடைபெற்றது. அலகாபாத் நகர வீதிகளில் வந்த ஊர்வலம் ஒன்றை ராணி நேரு தலைமை வகித்து நடத்திச் சென்றாள். திடீரென்று போலீஸ் தாக்குதலுக்கு உள்ளாயிற்று அந்த ஊர்வலம். தடுத்து நிறுத்தப்பட்ட தொண்டர்படையின் முன்னல் தலைவி நேரு ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். போலீஸ் தடித்தனமாகத் தடியடி கொடுத்தது. நாற்காலியிலிருந்த ராணி நேரு தரையில் விழுந்த பிறகும் கூட, பிரம்பு கொண்டு வெறித்தனமாகத் தாக்கினர் போலீஸார். அவள் மண்டை பிளந்து, ரத்தம் பெருகி ஓடியது. பிறகு அவளை யாரோ ஒரு அதிகாரி காரில் எடுத்து 'ஆனந்த பவனம்' சேர்த்தார். அன்று இரவு ராணி நேரு மரணமடைந்தாள் எனும் வதந்தி நகரம் முழுவதும் பரவியது.

பெட்ரோல் ஏற்ற பெருந்தீ எனச் சீறி எழுந்தனர் நகர மக்கள். அஹிம்சை உபதேசங்களையும், இதர தத்துவங்களையும் அவ்வேளைக்குக் காற்றிலே பறக்க விட்டனர். போலீஸாரைத் தாக்கத் தொடங்கினுர்கள். அதன் பயனுக துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டது. பொதுமக்களில் சிலர் பலியானுர்கள்.

இச் செய்தி கேட்டு நேருவும் சகோதரிகளும் அமைதியிழந்து அளவிலாத் துயரம் அனுபவித்தது ஆச்சர்யம் இல்லைதான்.

சிறையில் பலதரப்பட்ட குற்றவாளிகள் அடைபட்டுக் கிடந்தனர். ரகம்ரகமான பெண்கள் தண்டனைக் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தனர். விஜயலக்ஷ்மியும் கிருஷ்ணாவும் அவர்களிடம் அன்பும் ஆதரவும் காட்டினார்கள். அவர்களது துயரக் கதைகளைப் பொறுமையுடன் கேட்டு, ஆதரவான வார்த்தைகள் கூறினார்கள். குற்றவாளிகளின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்தும் பெருமூச்சு எறிந்தார்கள்

ஒரு வருஷ தண்டனை காலம் பூர்த்தியானதும் நேரு சகோதரிகள் விடுதலை அடைந்தனர். விடுதலை கிட்டியதை எண்ணி அவர்கள் குதூகலம் பெற்றாலும், அந்நாள் வரைஅன்புடன் பழகிய இதர கைதிகளைப் பிரிந்து செல்வதில் அவர்களுக்கு வருத்தமே ஏற்பட்டது. வறுமை, அறியாமை, சமூகச் சூழ்நிலை காரணமாகவும், சந்தர்ப்பங்கள் தூண்டி விட்ட உணர்ச்சிக் கொதிப்புகளினாலும்—ஏதேதோ குற்றங்கள் செய்து விட்டு, கடுமையான தண்டனை பெற்று சிறையினுள் தங்கள் வாழ்வின் பெரும் பகுதியை அணு அணுவாகக் கருக்கிக் கொண்டிருக்கும் அபலைகளுக்காக, சகோதரிகள் கண்கலங்கினார்கள். ஏற்ற ஆறுதல் வார்த்தைகள் கூறிவிட்டு வெளியேறினார்கள்.

லக்ஷ்மணபுரியிலேயே அவ்விருவரையும் விடுதலை செய்யவில்லை. சிறைத்தலைவியின் கண்காணிப்புடன்

அவர்கள் அலகாபாத் நகருக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு தான் விடுதலை கிட்டியது.

வீடு திரும்பிய விஜயலக்ஷ்மியும் கிருஷ்ணாவும் வெறிச்சென்றிருந்த பவனத்தைக் கண்டு வருந்தினார்கள். கமலா நேரு நோயின் காரணமாகக் கல்கத்தாவில் இருந்தாள். அன்னை நேருவும் அவளுடன் தங்கி இருந்தாள். ஆகவே அவ்விருவரையும் வரவேற்க அங்கு யாருமில்லை.

என்றாலும், சிறிது நேரத்திலேயே விடுதலைச் செய்தி பரவி ஊரே திரண்டுவிட்டது அவர்களை வரவேற்க. ஒரு வருஷ அமைதிக்கும் தனிமைக்கும் பிறகு தொடர்ந்த பரபரப்பும் கும்பலும் உற்சாகமும் நேரு சகோதரிகளுக்கு பிரமிப்பு ஏற்படுத்தி விட்டன. மக்களின் பரிவும் அன்பும் அவர்கள் உள்ளத்தைத் தொட்டன.

சில தினங்களுக்குப் பிறகு இருவரும் கல்கத்தா சென்றார்கள். கமலாவுடனும் தாயுடனும் 'ஆனந்த பவனம்' திரும்பினார்கள்.

விஜயலக்ஷ்மி தன் குழந்தைகள் மூவரையும் காணத் துடித்தாள். அவள் ஜெயிலுக்குப் போவதற்கு முன்பு, மூன்று பெண்களையும் பூனா நகரிலுள்ள 'போர்டிங் ஸ்கூல்' ஒன்றில் சேர்த்திருந்தாள் கடைசிக் குழந்தைக்கு அப்போது மூன்று வயதுதான் ஆகியிருந்தது. நண்பர்கள் சிலர் மேற்பார்த்து வந்த அப் பள்ளியில் தான் இந்திரா நேருவும் தங்கியிருந்தாள். ஆகவே, சகோதரிகள் இருவரும் பூனா சென்றனர்.

பூனா நகரில் தங்கியிருந்த நாட்களில் நேரு சகோதரிகள் அடிக்கடி ஏரவாடா சிறைக்குப் போய் அங்கிருந்த காந்திஜீயைக் கண்டு பேசிப் பயனடைந்தார்கள்.

பிறகு, இருவரும் குழந்தைகளுடன் பம்பாய் நகருக்கு வந்து சேர்ந்தார்கள். அங்குதான் கிருஷ்ணா ராஜா ஹத்திசிங்கைக் கண்டு பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. இருவருக்கும் காதல் வளர்ந்தது.

ராஜாவை மணந்து கொள்வதாக உறுதி அளித்து விட்டாள் கிருஷ்ணா. இவ்விஷயத்தை சகோதரியிடம் மட்டுமே அறிவித்தாள் அவள். விஜயலக்ஷ்மி அண்ணா நேருவிடம் சமயமறிந்து பிரச்னையை எடுத்துச் சொன்னாள். ஜவாஹர் ராஜாவைக் கண்டு பேசியும் காந்திஜீயின் ஆலோசனை பெற்றும், தங்கையின் கலியாணத்துக்கு ஏற்பாடு செய்தார்.

1933 அக்டோபர் 20-ம் நாள் 'ஆனந்த பவன்'த்தில் கிருஷ்ணாவுக்கும் ராஜாவுக்கும் திருமணம் நிகழ்ந்தது.

ராஜாவின் முழுப் பெயர் குணோத்தம ஹத்திசிங் என்பதாம். பாரிஸ்டர் தொழில் பயின்றவர். அரசியல் பணிகளிலும் அவர் ஆர்வம் காட்டி வந்தது உண்டு. பட்டம் பதவி புகழ் முதலியவைகளில் ஆசை கொள்ளாமல், பின்னணியில் நின்று தன்னால் இயன்ற அளவு நாட்டுப் பணி புரிவதே அவரது கொள்கையாம்.

# அத்தியாயம்-11.

ஜவாஹர்லால் நேரு மீண்டும் சிறையில் அடைபட்டார். கமலா நேருவுக்கு நோய் அதிகமாயிற்று; சிகிச்சை நாடி அவளை ஸ்விட்ஸர் லாந்துக்கு அழைத்துச் சென்றார்கள். நிலைமை மோசமானதும், நேரு விடுதலை பெற்று அங்கு சென்றார். கமலா குணமடையவில்லை. அவளை மரணம் ஏற்றுக் கொண்டது.

கிருஷ்ணா இரண்டு ஆண் குழந்தைகளின் தாயாகி இருந்தாள்.

இவ்விதம், நேரு குடும்பத்தில் துன்பமும் இன்பமும் அவ்வப்போது தோன்றி உணர்ச்சி மாற்றங்களை ஏற்படுத்தி வந்தன.

நாட்டிலும் சுமுகமான ஒரு சூழ்நிலை பிறந்திருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியருக்கு 'மாகாண சுயாட்சி' வழங்க முன் வந்தது. அத்திட்டத்தை ஏற்று, சட்ட சபையில் அங்கம் வகிக்க காங்கிரஸ் தீர்மானித்தது, அதற்காகத் தேர்தலில் கலந்து கொள்ள ஏற்பாடுகள் நடைபெற்றன,

1936-ல் தான் போராட்டம். காங்கிரஸ் கட்சியினர் ஓர் புறம். சர்க்காரின் தத்துபுத்திரர்கள், 'ஜரிகைத் தலைப்பா' ஜமீன்தார்களும், பதவிப் பித்தர்களும் மற்றொரு பக்கம். பலத்த போட்டிதான். நாடெங்கும் தேர்தல் பிரசாரம் சூறவளி வேகத்தில் பரவியது,

விஜயலக்ஷ்மி பண்டிட் ஐக்கிய மாகாணத்தில், லக்ஷ்மணபுரி கிராமத் தொகுதியில் தேர்தலுக்கு நின்றாள்.

அவளுக்கு எதிராக ஸ்ரீமதி வத்ஸலா போட்டியிட்டாள். அம் மாகாணத்தின் அப்போதையைக் கல்வி மந்திரியாக இருந்த ஸ்ரீ வத்ஸலா என்பவரின் மனைவி அவள். அரசாங்க பலம், அதிகாரிகளின் ஆதரவு, செல்வ மிகுதி, மந்திரி மனைவி எனும் அந்தஸ்து முதலிய பக்க பலங்கள் துணை நின்றன அவளுக்கு. ஆயினும் விஜயலக்ஷ்மி தான் வெற்றி பெற்றாள். அவளது தியாகம், சேவை, திறமை ஆகியவை அவளுக்கு உதவி புரிந்தன. ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்றாள் அவள்.

இந்தியாவில் பெரும்பான்மையான மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிசபை அமைக்கப்பட்டது. ஐக்கிய மாகாணத்தில் மந்திரிசபை அமைக்கும் பொறுப்பு கோவிந்த வல்லப பந்துக்கு ஏற்பட்டது. அவர் தமது மந்திரி சபையில் விஜயலக்ஷ்மிக்கும் இடம் அளித்தார். காந்திஜீயின் ஆசியுடன் அவள் மந்திரியானாள்.

விஜயலக்ஷ்மி பண்டிட் 1937 ஜூலை 29-ம் தேதி ஸ்தல ஸ்தாபன மந்திரியாகப் பதவி ஏற்றாள். அதன் மூலம் புதிதாக ஓர் சரித்திரம் ஸ்தாபிக்கப்பட்டது. 'இந்தியாவில் முதன் முதலாக ஒரு பெண் மந்திரியானாள்' என்ற பெருமைதான் அது.

புதிய சட்டசபையில் முதன் முதலாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரும் கௌரவமும் அவளுக்கே கிட்டியது.

'புதிய அரசியல் திட்டம் உகந்ததல்ல. அகில இந்தியப் பிரதிநிதிகள் அடங்கிய சபை ஒன்று வகுக்கும் அரசியல் அமைப்புதான் இந்தியாவுக்கு நன்மை பயக்கும்.

அத்தகைய சபை ஒன்றைக் கூட்ட வேண்டியது அவசியம்' என்ற தீர்மானத்தை முதன் முதலாகச் சட்ட சபையில் நிறைவேற்ற வேண்டும் என்று காங்கிரஸ் எண்ணியது.

அதன்படி ஐக்கிய மாகாணச் சட்டசபையில் முதல் மந்திரி பந்த் அத் தீர்மானத்தைக் கொண்டு வருவதாக இருந்தது. எதிர்பாராத வகையில் அவர் நலக் குறைவு அடைந்தார். ஆகையால், அவருக்குப் பதிலாக விஜயலக்ஷ்மியே தீர்மானத்தை சபை முன் சமர்ப்பித்தாள்.

சட்டசபை நிகழ்ச்சிகளுக்கு முற்றிலும் புதியவள் அவள். பலத்த எதிர்ப்பையும் விவாதங்களையும் எழுப்பக் கூடிய பிரச்னை அது. எனினும் விஜயலக்ஷ்மி கூச்சமோ அச்சமோ இன்றி எழுந்து புன்னகையோடு பேசினாள். தன்னம்பிக்கையோடும், உணர்ச்சிகரமாகவும் பேசினாள்.

அத் தீர்மானத்தில் திருத்தம் புகுத்த விரும்பினர் சிலர். பலத்த விவாதம் எழுந்தது. விஜயலக்ஷ்மி விட்டுக் கொடுக்காமல், பெருமிதமாக, விடை அளித்தாள். 'தந்தைக்கு ஏற்ற மகள். தமையனுக்குச் சரியான தங்கை. நல்ல திறமைசாலி' என்று எல்லோரும் போற்றும் வகையில் அவள் சட்ட சபையில் பிரகாசித்தாள்.

மந்திரி பதவிக்கு அவள் பொருத்தமானவள்; அவளுக்கு அப் பதவி மிகவும் பொருத்தம் என்று நாட்டினர் வியந்தனர். இதைப் பற்றி கிருஷ்ணை எழுதியுள்ளது குறிப்பிடத் தகுந்தது தான்.

"சிறு பிராயம் முதலே சாதுர்யம் நிறைந்து விளங்கியவள் தான் சொரூபா. மந்திரியாவதற்கு அவள் எவ்விதத்திலும் தகுதி உடையவளே. எந்த விஷயத்திலும் அவள் பதறுவதே கிடையாது. எத்தகைய சந்தர்ப்பமாயினும் சரியே; பதட்டம் அடையாமல் அமைதியாகக் கவனித்துச் செயல்புரியும் குணம் அவளிடம் உண்டு. அவளது வசிகரப் பண்பும், தன்னடக்கமும், அழகும் மக்களை வசியம் செய்து அவளுக்கு வெற்றி பெற்றுத் தரும் துணைகளாயின. மந்திரி பதவியில் அவள் நன்கு சோபித்தாள். அவள் ஏற்றுக்கொண்டது கடினமான பொறுப்பு. அத்தகைய பொறுப்புக்கு வேண்டிய பயிற்சியோ, பழக்கமோ அவளுக்குக் கிடையாது. ஆயினும், நாட்டு மக்கள் போற்றும் முறையில் வெற்றிச் சிறப்புடன் திகழ்ந்தாள் அவள்.

"சொரூபா அரசியலில் தீவிரமாகச் செயல்புரிய முன் வந்த போது, அவளுடைய பேச்சுத் திறமை எல்லோருக்கும் ஆச்சர்யமே தந்தது. பிரசங்கியாக மிளிர்வதற்கே பிறந்தவள் போல், நடுக்கமின்றி—கூச்சமின்றி, பெரியபெரிய கூட்டத்தின் முன்னிலையிலும் பேச முடிந்தது அவளால். தெளிந்த ஓட்டத்துடனும், சொல்லாட்சியுடனும் ஹிந்துஸ்தானி, ஆங்கிலம் இரண்டையும் பேச வல்லவள் அவள்.

"இளம் பருவத்திலேயே சொரூபாவின் கூந்தலில் நரை தெளியத் தொடங்கியது. தலைமுறை தலைமுறையாக வளர்ந்துள்ள குலப்பண்பு இது. விரைவிலேயே அவள் கூந்தல் வெள்ளி முலாம் ஏற்றுவிட்டது. ஆனால் அது அவளது இனிய தோற்றத்துக்கு எடுப்பாகத்தான்

அமைந்துள்ளது. அவள் நல்ல தாய்; திறமையான குடும்பத் தலைவி. அரசியல் அவள் வாழ்வின் பெரும் பொழுதைப் பற்றிக் கொண்ட போதிலும், குடும்பத்தைக் கவனித்துக் குழந்தைகளை போஷிப்பதில் அவள் ஒரு குறைவும் வைத்ததில்லை. அவற்றுக்குத் தேவையான காலமும் அவளுக்கு இருந்தது.

தன்னைச் சுற்றிலும் இனிமையும் அழகும் நிறைந்திருக்க வேண்டும் என்பது விஜயலக்ஷ்மியின் ஆசை. தனது வீட்டைப் போலவே, தான் கடமை ஆற்றும் அலுவலகமும் கலைஎழிலுடன் மிளிர வேண்டும் என்ற விருப்பம் அவளுக்கு உண்டு.

அவள் சர்க்கார் காரியாலத்தில் ஓர் அறை பெற்றதும், அதை மனோகரமான சூழ்நிலையாக மாற்றிவிட்டாள். அநாவசியமாக அடைத்துக்கொண்டு கிடந்த மேஜை நாற்காலிகள், மரச் சாமான்களை எல்லாம் அகற்றிவிட உத்திரவிட்டாள். சுவரில் பூசப்பட்டிருந்த பசுமை நிறத்துக்குப் பொருத்தமான வர்ண விரிப்பைத் தரையிலே பரப்பச்செய்தாள். குளுமை நிறத் திரைச் சீலைகளைத் தொங்கவிட்டாள். மேஜை மீது அழகு செய்ய இனிய ரோஜா மலர்களுக்கு ஏற்பாடு பண்ணினாள்.

அவள் கடமைகளைக் கண்ணும் கருத்துமாய் கவனிக்கத் தவறினளில்லை. கட்டுக்கட்டாகக் குவிந்து கிடந்த கடிதங்களை எல்லாம் பொறுமையுடன் வாசித்து மக்களின் குறைகளை உணர்ந்து, உரிய வகையில் உத்திரவுகளிட்டாள் விஜயலக்ஷ்மி. அவளது அறிவை

யும் சுறுசுறுப்பையும் ஓயாது உழைக்கும் பண்பையும் கண்டு போற்றுதார் எவருமில்லை.

பொதுமக்களின் சுகாதார அபிவிருத்திக்காகவும், கிராமங்களின் முன்னேற்றத்துக்காகவும் அவள் எவ்வளவோ சீர்திருத்தங்கள் கொண்டு வந்தாள். குடி தண்ணீர் வசதி இல்லாது கஷ்டப்பட்ட கிராமங்களுக்கு அவ்வசதி கிட்ட வழி செய்தாள். பிரசவ காலத்தில் போதிய மருத்துவ உதவி கிடைக்காது அவதியுற்றவர்களின் துயர் நீக்கும் நோக்குடன் புதிய திட்டங்கள் செய்தாள்.

'கிராமங்களில் மொத்தம் 300 வைத்தியசாலைகளாவது ஏற்பட வேண்டும். அவற்றில் 200 ஆயுர்வேத, யூனானி வைத்தியசாலைகளாக இருக்க வேண்டியது அவசியம்' என்று திட்டமிட்டாள் ஸ்தல ஸ்தாபன மந்திரியான விஜயலக்ஷ்மி.

அவள் ஆட்சிக்காலத்தில் 200 விளையாட்டு மைதானங்கள் ஏற்பட்டன. ஊர்தோறும் சென்று மருந்து தர 16 வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டன. 24 இடங்களில் பிரசவ ஆஸ்பத்திரியும், குழந்தைகளுக்கு வைத்தியம் செய்ய 192 புதிய வைத்தியசாலைகளும் உண்டாயின. குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் வழங்கும் திட்டமும், முதியோர் கல்விக்காக இரவுப்பள்ளிக்கூட வசதிகளும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டன.

இவ்விதம் ஆர்வத்துடனும் சேவா உணர்ச்சியோடும் செயல்புரிந்து வந்தாள் விஜயலக்ஷ்மி. ஆசை நிறைந்த திட்டங்கள் பல் வகுத்திருந்தாள் அவள்.

ஆனால், பணமுடை பெருந்தடையாக நின்றது. அத்துடன் சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் தலைகாட்டியது.

## அத்தியாயம் 12

உலகத்திலே கொடுமை மேகங்கள் சூழ்ந்து உறுமத் தொடங்கின. முஸோலினி, ஹிட்லர் ஆகிய பாஸிஸ—நாஜிஸ வெறியர்கள் யுத்த விதையைத் தூவிக் கொண்டிருந்தார்கள்.

நேருவின் குடும்பத்திலும் சோக மேகம் கவிந்தது. 1938-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் ஒரு நாள் ராணி நேரு திடீர் மரணம் அடைந்தாள். அவள் இறந்த இருபத்து நான்கு மணிநேரத்திற்குள்ளாகவே—தங்கையிடம் உயிரை வைத்திருந்த—'பீபி அம்மா'வின் ஆவியும் பிரிந்தது. அன்னையை இழந்ததால் வாழ்க்கையில் ஈடுசெய்ய முடியாத ஒரு பகுதியைப் பறிகொடுத்தோம் என்று நேருவும் சகோதரிகளும் வருந்தினார்கள்.

நாடு பிடிக்கும் வெறி ஆசை பற்றிய சர்வாதிகாரிகளின் தயவினால், 1939-ம் வருஷம் பிற்பகுதியில் இரண்டாவது உலக மகாயுத்தம் முளைத்து, ஓங்கி வளர்ந்தது. எதேச்சாதிகார குணம் படைத்த பிரிட்டிஷார் இந்தியாவையும் யுத்தத்தில் இழுத்துவிட்டனர்.

நாட்டினரின் சம்மதம் பெறாமல்—சட்டசபைகளையோ, மந்திரிகளையோ கலந்து ஆலோசிக்காது—'தான் நினைத்த மூப்பாக', தனக்குச் சாதகமாக பிரிட்டிஷ் சர்க்கார் செயல் புரிந்ததை இந்தியர் கண்டித்தனர்.

சுதந்திரத்தை லட்சியமாகக் கொண்ட காங்கிரஸ் அந்நிய ஏதேச்சாதிகாரத்தை எதிர்த்து மறுபடியும் போராட வேண்டியதுதான் என்று திட்டமிட்டது. அதனால், காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜிநாமாச் செய்தன.

பதவியைத் துறந்து வெளியேறிய தலைவர்கள் காந்திஜீயின் ஆக்கிஞைக்காகக் காத்திருந்தனர். எதிரிக்குக் கூட பெருந்திங்கு விளைவிக்கக் கூடாது எனும் நல்லெண்ணம் உடைய மகாத்மா தீவிரமான போராட்டத்துக்கு இசையவில்லை. எதிர்ப்பைக் காட்டுவதற்காக 'தனி நபர் சத்தியாக்கிரகம்' மட்டும் போதுமானது என்று அறிவித்தார் அவர்.

பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்குமிடையே மூண்ட யுத்தம் நாசப் பாதையிலே பயங்கரமாக முன்னேறிக் கொண்டிருந்தது. காலத்துக்கேற்ப, பிரிட்டிஷார் மன மாற்றம் கொள்வர், இந்தியாவுக்கு விடுதலை தருவர் என்று எதிர்பார்த்த நாட்டுமக்கள் ஏமாற்றமே கண்டனர்; செயல் திறம் இழந்து குமைந்தார்கள்.

வேறு வழி இல்லை எனக் கண்டவுடன், காந்திஜீ 1940-ல் 'தனி நபர் சத்தியாக்கிரக'த்தை ஆரம்பித்து வைத்தார். நாட்டின் ஆத்மீக எதிர்ப்பைக் காட்டும் ஏகப் பிரதிநிதியாக, காந்திஜீயால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் சத்தியாக்கிரகி விநோபா பாவே. இரண்டாவது சத்தியாக்கிரகி ஜவாஹர்லால் நேரு.

விநோபாவை சத்தியாக்கிரகத்தின் போது கைது செய்த சர்க்கார், நேருவுக்கு அந்தச் சந்தர்ப்பத்தைத்

அளிக்கவே இல்லை. காந்திஜீயைக் கண்டு பேசி விட்டுத் திரும்புகிற பாதையில் நடு வழியில் நேருஜீயைக் கைது செய்தனர். அவருக்கு நான்கு வருஷக் கடுங்காவல் தண்டனை விதித்தது சர்க்கார்.

அரசாங்கத்தின் கன்னெஞ்சக் கொடுஞ் செயல் நாட்டையே ஒரு உலுக்கு உலுக்கியது. நாட்டு மக்களின் ஆவேசத்தைத் தூண்டி விட்டது. சத்தியாக்கிரகத்தில் பங்கு பெறப் பலரும் துடித்தார்கள்.

இந்த சத்தியாக்கிரகத்தின் போது, காந்திஜீயின் அனுமதி பெற்று, கிருஷ்ணாவின் கணவர் ராஜாவும் சிறை புகுந்தார். கிருஷ்ணா, காந்தியின் அனுமதி கோரிய போது, மகாத்மா மறுத்து விட்டார். சின்னஞ் சிறு குழந்தைகள் இருக்கின்றன ; அவற்றைக் கவனிக்க வேண்டிய கடமை அவளுக்கு உண்டு என்று அறிவித்து விட்டார் மகாத்மா. அவரது வாக்கை கிருஷ்ணா எப்படித் தட்டிக் கழிக்க இயலும்?

விஜயலக்ஷ்மி சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டாள் 1940 டிசம்பர் 9–ம் தேதி அவள் சத்தியாக்கிரகம் செய்தாள். சர்க்கார் உடனே அவளைக் கைது செய்து, நான்கு மாதம் சிறைவாசம் என்று தண்டனை விதித்தது.

இரண்டாவது முறையாகச் சிறைத் தண்டனை பெற்ற விஜயலக்ஷ்மி நான்கு மாதங்களையும் ஐக்கிய மாகாணத்தில் உள்ள நைனி நகர ஜெயிலில் கழிக்க நேர்ந்தது.

உலக நாடுகள் யுத்தக் கொடுமைகளை அனுபவித்து அவதியுற்றன. பிரிட்டனின் நெருக்கடியான நிலைமை

யைப் பயன் படுத்திக் கொண்டு, இந்தியாவில் போராட்டம் துவக்கி ஆட்சியினரைத் திணற வைக்க வேண்டும் என்று காந்திஜீ விரும்பவே இல்லை. நேர்மையான முறையில் உரிமைகளைக் கோரினார் அவர். அவருக்கும் வைஸிராய்க்குமிடையே கடிதப் போக்கு வரத்து நடைபெற்றது. ராஜதந்திரத்தில் ஊறிப் போயிருந்த ஆங்கிலேயர் முடிவும் தெளிவும் நிறைந்த பதில் எதுவும் தரவில்லை. கண் துடைப்பு சமாதானங்களும் தட்டிக் கழிக்கும் உறுதிமொழிகளும் கூறினர் சமரசம் பேசத் தூதர்களை அனுப்பிக் காலம் போக்கினர். தலைவர்களில் பலரை விடுதலை செய்தனர். அதே வேளையில் யுத்த நிதி என்ற பெயரில் நாட்டு மக்களிடமிருந்து பணத்தைச் சுரண்டினார்கள். ஆயிரக்கணக்கான மக்களைப் பட்டாளத்தில் சேர்த்து வந்தனர்.

1942 ம் வருஷம் இந்திரா நேரு பெரோஸ் காந்தியைத் திருமணம் செய்து கொண்டாள். காந்திஜீயின் ஆசியுடன் நிகழ்ந்த காதல் மணம் அது. சேவா கிராமத்திலேயே கலியாணத்தை நடத்தலாம் என்றார் காந்திஜீ

ஆயினும், விஜயலக்ஷ்மியும் கிருஷ்ணாவும் இந்திராவின் திருமணம் 'ஆனந்த பவன' த்தில் தான் நடைபெற வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். பொலிவு குன்றியிருந்த பவனத்தில் மீண்டும் ஆனந்தம் பொங்க வேணும்; அதற்கு இந்திராவின் கலியாணம் ஆரம்ப விழாவாக அமையும் என்று ஆசைப்பட்டார்கள் அவர்கள்.

அவர்கள் விரும்பிய விதமே கலியாணம் சிறப்பாக நிகழ்ந்தது. 'ஆனந்த பவன' மும் சில தினங்கள் கோலாகலமாக விளங்கியது.

# அத்தியாயம்-13.

முப்பதாண்டுகளுக்கு அதிகமாகவே சுதந்திரத்துக்காகப் போராடி வந்த காங்கிரஸ், ஆங்கிலேயரின் போக்கை நன்கு புரிந்து கொண்ட பிறகும் சும்மா இருக்க விரும்பவில்லை. நாட்டினரின் உள்ளத்துடிப்பை உணர்ந்த காந்திஜீ தீவிரச் செயலுக்கு வழிகாட்ட எண்ணினார்.

1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் எட்டாம் தேதி பம்பாய் நகரில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூடி ஆலோசனை நடத்தியது. 'அசிரத்தை காட்டும் அரசாங்கத்துடன் போராடியே தீர வேண்டும். செயலாற்ற வேண்டும்; அல்லது செத்து மடிய வேண்டும்' என்று நாட்டுக்கு ஆணையிட்டார் மகாத்மா.

அன்று இரவு காரியக் கமிட்டிக் கூட்டம் முடிந்த பிறகு தலைவர்கள் ஓய்வுபெற வீடுகள் சேர்ந்தனர். அவர்கள் வெகு நேரம் தூங்கியிருக்க மாட்டார்கள். அரசாங்கத்தின் சட்டக் கைகள் அவர்களைத் தட்டி எழுப்பின. பின்னிரவு மூன்று மணிக்கு போலீஸார் காந்திஜீயையும் இதர தலைவர்களையும் கைதுசெய்து எங்கோ கொண்டு போய்விட்டார்கள்.

இப்படிச் செய்தால் மக்கள் பயந்து ஒடுங்கிப் போவார்கள்; நாட்டில் அமைதி நிலவும் என்று ஆளும் இனத்தினர் நம்பினார்கள். ஆனால் அவர்கள் எதிர்பாராத விபரீத விளைவுகளே நாடெங்கும் தலைதூக்கி விட்டன.

தலைவர்கள் என்ன ஆனார்கள்? அவர்களைப் போலீசார் எங்கே கொண்டு போனார்கள்? இவ்விஷயம் எதுவும் யாருக்கும் விளங்கவில்லை. தீவாந்தரங்களுக்கு அனுப்பி விட்டனர்; நாடு கடத்திக் கப்பலேற்றி விட்டனர் என்ற வதந்தி பரவியது எங்கும். இரவோடு இரவாக, இவ்வளவு மர்மமாக, தலைவர்களைக் கைது செய்தது அக்கிரமம் என்ற உணர்ச்சி காரணமாக நாட்டில் கோபமும் கொந்தளிப்பும் ஏற்பட்டது.

'வெள்ளையனே, வெளியேறு!' என்று மகாத்மா காந்தி அருளிய மணிவாசகத்தைச் செயல் முறைக்குக் கொண்டுவந்து அவர்களை வெளியேற்ற ஆவன செய்வோம் என்று நாட்டினர் துணிந்தனர். அஹிம்சையை அந்தரத்திலே விட்டனர். அழிவுவேலைகளைச் செய்து களித்தனர்,

ரயில்களைக் கவிழ்த்தார்கள்; ரயில் பாலங்களை உடைத்தார்கள்; கட்டிடங்கள் பலவற்றைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். போலீசாரைத் தாக்கி, ஆயுதங்களைப் பறித்தார்கள். கொள்ளை, கொலை, தீ—நாடு முழுவதும் கோபக் கொந்தளிப்பு. ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் மக்கள் கொதித்து எழுந்தால் நாடு எப்படி மாறும் என்பதற்குப் பிரமாணமாக விளங்கியது இந்தியா.

ஆட்சியினர் வேடிக்கை பார்த்து நிற்பார்களா? வெறி வேகத்தில் செயல் புரிந்தார்கள். அடக்குமுறைகளை அளவில்லாமல் கையாண்டார்கள். கிராமங்களையே சுட்டெரித்தார்கள். ஜனக் கூட்டங்கள் மீது பீரங்கிப் பிரயோகம் செய்தனர். விமானங்களிலிருந்து வெடிகுண்டுகள் வீசினர். மக்களைச் சித்திரவதை செய்தார்கள்.

வெளியே இருந்த தலைவர்கள் மக்கள் தாங்களாகவே மேற்கொண்டுவிட்ட போராட்டம் தகாத செயல் என்று எடுத்துச் சொல்லி, நாட்டில் அமைதியைப் பரப்ப அரும்பாடு பட்டார்கள். விஜயலக்ஷ்மி பண்டிட்டும் பல இடங்களுக்கு அலைந்து திரிந்து பிரசாரம் செய்தாள். அதிகார ஆணவத்தை எதிர்த்துப் பழி வாங்கும் நினைவில் எழுச்சியுற்ற மக்களிடையே, நாட்டு நலம் நாசமுறக் கூடாது என்று போதித்து வந்தாள் அவள்.

அவள் குரல் அப்போது மக்களிடையே எடுபடவுமில்லை; அரசாங்கத்தினரால் போற்றப் படவுமில்லை. இரவு நேரத்தில் அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த வேளையில் போலீஸார் வீடு தேடிச் சென்று அவளைக் கைது செய்தனர்.

அது நிகழ்ந்தது 1942 ஆகஸ்டு மாதம் 12-ம் தேதி. சிறை செல்வது அவளுக்குப் புதிய விஷயம் அல்ல. தனியளான தன்னைப் பிடித்துச் செல்ல மாஜிஸ்ட்ரேட்டும், போலீஸ் அதிகாரியும், பலப்பல போலீஸ் வீரர்களும் வந்து சேர்ந்ததைக் கண்டு அதிசயித்தாள் அவள்.

மூன்று புதல்வியரில் கடைசிப் பெண் வயதில் சிறியவளாக இருந்தாள். இனி அவளை யார் கவனிப்பது என்ற கவலை தான் தாய் உள்ளத்தில் எழுந்தது. அன்னையின் மனக்குழப்பத்தை உணர்ந்து விட்டவள் போல் ரீதா பேசினாள். 'இந் நாட்களில் வாழ்வதே அற்புதமாக இருக்கிறது. என்னை இவர்கள் ஜெயிலுக்கு அழைத்துப் போகமாட்டார்களா என்ற எண்ணம் எனக்கு உண்டாகிறது.' என்றாள் அவள். மகளின் பேச்சு தாயின் மனக் கவலையைத் துரத்தி விட்டது.

ரீதாவை முத்தமிடக் குனிந்தாள் விஜயலக்ஷ்மி. 'நாங்கள் வெளியே வந்து வழி அனுப்புவோம். இதை எல்லாம் நாம் எப்படி ஏற்றுக் கொள்கிறோம் என்பதைப் போலீஸ்காரர்களும் தெரிந்து கொள்ளட்டுமே!' என்றாள் இரண்டாவது மகள் தாரா.

மூத்த பெண் லேகா சொன்னாள் 'கவலைப்படாதே அம்மா. இவர்களை நான் கவனித்துக் கொள்கிறேன்' என்று.

'அருமை அம்மா, போய்வா, நமது கொடி தாழ் வுறாதபடி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்று தாரா சொன்னாள்,

இளையவள் ரீதா தாயைத் தழுவிக் கொண்டு, உறுதியான குரலில் சொன்னாள்; 'அம்மா, உன் உடம்பைக் கவனித்துக்கொள், நீ உள்ளே அடைபட்டுக் கிடக்கிறபோது, நாங்கள் வெளியே பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடுவோம்.'

'ஈன்ற பொழுதினும் பெரிது' உவந்தாள் தன் புதல்வியரின் வீரவாசகம் கேட்ட தாய்.

அங்கு சில தினங்கள் தங்கிச் செல்ல வந்திருந்த இந்திராவும், புதல்வியரும், பணியாளரும் வழியனுப்ப, விஜயலக்ஷ்மி மகிழ்ச்சியுடன் சிறைசென்றாள், இம்முறையும் அவள் நைனி ஜெயிலில் தான் இடம் பெற்றாள். முன்பு பழக்கமான அறையே இப்பொழுதும் கிடைத்தது.

சிறைவாசம் தொல்லைகள் மலிந்ததாகத்தான் இருந்தது. கோடைவெயிலின் உஷ்ணம் வேறு கஷ்டட்

படுத்தியது. எனினும் அவள் அயர்வுறாது பொழுது போக்கி வந்தாள்.

ஆகஸ்டு 30-ம் தேதி மலர்ந்த முகத்துடனும், மலர்மாலைகள் சுமந்த தோள்களோடும், மிடுக்காக சிறை புகுந்த மகள் லேகாவைத் தாய் காண நேர்ந்தது. முதலில் மகள் தன்னைச் சந்திக்க வருவதாக எண்ணி னாள் அவள். உண்மை புரிந்ததும், 'இச்சிறுமிக்கா சிறை வாசம்?' என்று துடித்தது அவள் உள்ளம். பெருமிதமும் ஏற்பட்டது.

விஜயலக்ஷ்மி சிறையிலிருந்த போது, மகாதேவ தேசாய் காலமான செய்தி கிடைத்தது. மிகுந்த வேதனை அடைந்தாள் அவள், அவளது வாழ்வின் பழைய கால நினைவுகள் அவள் எண்ணவெளியிலே நிழலாடின. ரஞ்சித் பற்றிமுதன் முதலில் தெசாய் அறிமுகம் செய்த சந்தர்ப்பமும் அவளுக்கு நினைவு வந்தது. உத்தம நண்பரின் பிரிவு ரஞ்சித் பண்டிட்டுக்கு ஆற்ற முடியாத் துயரம் அளிக்கும் என்று கலங்கினாள் அவள்.

சில தினங்களிலேயே ரஞ்சித்தும் கைது செய்யப் பட்டார். அவரும் நைனி சிறையில் ஓர் புறம் பாது காப்பில் வைக்கப்பட்டார். இருவரும் அபூர்வமாக என்றாவது சந்திக்க அனுமதி கிடைத்து வந்தது. ஒரே கட்டிடத்தினுள் அருகருகே இருந்தும் கூட அவர்களுக் கிடையே வெகுதூரம் பரவிக் கிடந்தது போல்தான் தோன்றியது. பரஸ்பரம் புத்தகங்கள் பரிமாறிக் கொள்ள அவர்கள் சில சமயம் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் கடிதத் தொடர்பு கொள்ள உரிமை இருந்த தில்லை.

இந்திராவும் பெரோஸ் காந்தியும் கைது செய்யப் பெற்று நைனி ஜெயிலில் நேரு குடும்ப முகாமாக மாறி விட்டது!

## அத்தியாயம்-14.

பிரிட்டிஷாருக்கு அமெரிக்காவின் பக்கபலமும் டாலர் உதவியும் தேவைப்பட்டது. அமெரிக்கர் பலர் இந்தியாவுக்கு அனுதாபம் காட்டி வந்தனர். இந்தியா விஷயத்தில் பிரிட்டன் நடந்து கொள்வது சரியல்ல என்ற கருத்து அமெரிக்காவில் பரவி வந்தது.

காங்கிரஸ் தலைவர்கள் இந்தியாவின் உண்மை நிலைமை பற்றியும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பண்பு கள் குறித்தும் உலகின் பல பகுதிகளிலும் பிரசாரம் செய்து வரத்தவறியதில்லை. இதன்மூலம் உலகநாடு களின் அனுதாபத்தையும் ஆதரவையும் இந்தியா பெற முடிந்தது. அமெரிக்காவிலும் நம் நாட்டுத் தலைவர் களின் பிரசாரம் வேலை செய்திருந்தது.

'ஹிட்லர், முசோலினி ஆகியோரின் சர்வாதிகாரத் தைக் கண்டித்து, ஐரோப்பிய நாடுகளுக்காகப் பரிந்து பேசுகிற பிரிட்டன் இந்தியாவை அடிமை நாடாக வைத்திருப்பது ஏன்?' என்ற குரல் அமெரிக்காவில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. தனது கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக இங்கிலாந்து அந்நாட்டில் பிரசாரம் செய்ய வேண்டியது அவசியமாயிற்று.

அவ்வகையில் இந்தியசர்க்காரும், பிரிட்டிஷ் அர சாங்கமும் கோடிக்கணக்கிலே பணத்தைச் செலவு செய்தது. இந்திய சர்க்காரின் ஆதரவு பெற்ற 'கைக்

கூலிகள்' பலர், ஆங்கிலேயருக்கு சாதகமாக பொய் பிரசாரம் செய்து வந்தார்கள் அங்கே. ஆங்கிலேயர் ஆளுகையினால் இந்தியா பெற்று வருகிற இன்பங்கள், லாபங்கள் பற்றிக் கணக்கில்லாது கதைத்தார்கள்.

அமெரிக்காவில் தங்கி உண்மையை உலகுக்கு உணர்த்த முயன்ற ஒரு சிலரின் பேச்சு, கட்டுப்பாடான பொய்ப் பிரசாரத்தின் முன்னால் எடுபடமுடியாது போயிற்று.

இச் சந்தர்ப்பத்தில்தான் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக அமெரிக்காவில் ஐக்கிய நாடுகளின் மகாசபை ஒன்று கூடியது. அதில் கலந்துள்ள இந்திய சர்க்காரின் சார்பிலே ஸர். ராமசாமி முதலியார், ஸர் பிரோஸ் கான் நூன், ஸர் வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஆகிய மூவரும் சென்றனர் அவர்களது திறமையும் வாக்குவன்மையும் இந்திய சர்க்காரின் புளுகுப் பிரசாரத்துக்குத் துணை புரிந்தன.

ஐக்கிய நாடுகளின் சபைக்கும், அமெரிக்காவுக்கும் இந்தியா பற்றிய உண்மைகளை ஆணித்தரமாக எடுத்துச்சொல்ல வேண்டியது அவசர அவசியம் என்ற நிலைமை ஏற்பட்டது. சிறையிலிருந்து விடுதலை பெற்று வெளியே வந்திருந்த விஜயலக்ஷ்மி அந்தப் பணியைச் செய்யத் துடித்தாள். அதற்கு அரசாங்கம் அனுமதிச் சீட்டு மறுக்கும் என்பது அவள் அறிந்தது தான்.

ஆகையினால், அமெரிக்கக் கலாசாலை ஒன்றில் கல்வி பெற்று வாழும் தன் புதல்வியர் இருவரையும் காணும் ஆசையினால் அமெரிக்கா செல்வதாகச் சொல்லி அனுமதிச் சீட்டு கோரினாள் அவள். சில்லறைத் தடை

கள் எழுப்பி, பிறகு சீட்டு வழங்கியது அரசாங்கம். 1944 நவம்பரில் விஜயலக்ஷ்மி அமெரிக்காவுக்குக் கப்பலேறி ஞள்.

அமெரிக்கா சேர்ந்ததும், அங்கு வசித்த தேசபக்த இந்தியர்களின் துணையோடு, தீவிரப் பிரசாரத்தில் ஈடு பட்டாள் அவள். இந்திய அரசாங்கத்தின் கையாட்கள் இந்தியாவின் பிரதிநிதிகள் அல்லர்; அவர்கள் வாக்கு இந்திய மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கவு மில்லை என்று வீரமுழக்கம் செய்தாள் அவள்.

'நான் இந்திய காங்கிரஸ் மகாசபையைச் சேர்ந்த வள். அமெரிக்காவில் உள்ள இந்தியன் லீக் என்னை ஒரு பிரதிநிதியாக ஏற்று, இந்தியாவின் உண்மை நிலை மையை எடுத்துச் சொல்லும் பொறுப்பை எனக்கு அளித்துள்ளது. இந்தியா இன்று இங்கிலாந்துக்கு அடி மைப்பட்டுக் கிடக்கிறது. இந்தியாவுக்குச் சுய அரசு இல்லை; சுயமான பிரதிநிதித்துவமும் இல்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தேர்ந்தெடுத்த நபர்களே உங்கள் சபை யில் அங்கம் பெற்றிருக்கிறார்கள். இது மோசமான நிலைமை மட்டுமல்ல; நியாய விரோதமும் கூட. ராஜ்ய தர்மத்துக்கு ஒத்து வராத செயலுமாகும். ஆகவே, சர்வ சுதந்திரம் பெற்ற சகல நாடுகளின் பிரதிநிதிகள் கொண்ட சபை என்பது அர்த்தமற்றதாகி விடுகிறது. உலக ஜனத்தொகையில் ஐந்திலொரு பங்கு கொண்ட இந்தியா பரிபூரண சுதந்திரம் பெற நீங்கள் பிரகடனம் செய்ய வேண்டும். ஏகாதிபத்திய ஆசையும் சுரண்டலும் மமதையும் ஒழிந்தாலன்றி உலகில் சமாதானம் நிலைக் காது. உங்கள் சபையும் தன் கடமையைச் செய்ததாகக் கொள்ள முடியாது.

இவ்விதம் மனு ஒன்று தயாரித்து விஜயலக்ஷ்மி ஐக்கிய நாடுகளின் மகாநாட்டினருக்கு அனுப்பி வைத்தாள். அச் சபைக்கு வந்திருந்த பல தேசத்துப் பிரதிநிதிகளில் பெரும்பாலானவருக்கு பேட்டி அளித்து இந்தியாவின் பிரச்னைகளை விளக்கிச் சொன்னாள். பத்திரிகை நிருபர்களைச் சந்தித்து இந்தியா பற்றிய உண்மைகளை உணர்த்தினாள். பிரிட்டிஷாரின் பொய்ப் பிரசாரத்தை எதிர்த்துப் பல வகைகளிலும் ஆதரவும், நன்மதிப்பும் தேடினாள்.

அவளது வசீகரத் தோற்றம், இனிய பேச்சு, மோகன முறுவல், சுறுசுறுப்பு, ஆர்வம், அழகான உடை முதலியவற்றைக் கண்டு வியந்து போற்றியது அமெரிக்கா. பல இடங்களிலும் வந்து பேச வேண்டும் என்று அழைப்புகள் குவிந்தன. அவள் பெயரும் புகழும் பரவாத இடம் இல்லை என்று ஆயிற்று.

கலிபோர்னியா, பால்டிமோர் ஆகிய மாகாணங்களின் சட்டசபைகள் விஜயலக்ஷ்மிக்கு வரவேற்பு அளித்து மரியாதை செய்தன. அவளது பிரசாரத்தின் வன்மையால், அமெரிக்காவும் இதர நாடுகளும் 'இந்தியாவை திருப்தி செய்தாக வேண்டும். உலக சமாதானத்துக்கு இந்தியா சுதந்திரம் பெற வேண்டியது அவசியமாம்' என்று வற்புறுத்த முன் வந்தன.

அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு விஜயலக்ஷ்மி 1945 அக்டோபர் மாதம் லண்டன் நகரடைந்தாள். அங்கிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்தாள். அவளுடைய கீர்த்தி மிகவும் ஓங்கியிருந்தது.

விஜயலக்ஷ்மியின் கணவர் ரஞ்சித் பண்டிட் 1944-ம் வருஷம் உயிர் நீத்தார். தேச சேவையில் ஈடுபட்டு, வாழ்வில் பத்து வருஷ காலத்தை அவர் சிறையில் கழிக்க நேர்ந்தது. அது அவர் உடல் நலனை மிகுதியும் பாதித்து வந்து, மரணத்தை சீக்கிரமே கொண்டு தந்தது.

## அத்தியாயம் 15.

இந்தியா சுதந்திரம் பெற்றது. காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது, ஜவாஹர்லால் நேருவின் திறமையும், புகழும், அயல் நாட்டுக் கொள்கையும் உலக நாடுகளிடையே இந்தியாவுக்குத் தனித்த ஸ்தானம் பெற்றுத் தந்தன.

சுதந்திர இந்தியாவின் மதிப்பை உயர்த்தி, அயல் நாட்டு உறவை பலப்படுத்துவதற்காக நாடு தோறும் ராஜ்யத் தூதுவர்களை நியமித்தது அரசாங்கம். விஜயலக்ஷ்மி சோவியத் ரஷ்யா சென்றாள், இந்தியாவின் ராஜீயத் தூதுவராக.

அந் நாட்டில் சில மாதங்கள் பணிபுரிந்து விட்டு அவள் அமெரிக்கா சேர்ந்தாள். அமெரிக்கா, மெக்ஸிக்கோ தேசங்களில் இந்திய அரசியல் தூதுவராகப் பொறுப்பு வகித்தாள். சுதந்திர இந்தியாவின் பிரதிநிதிகள் அடங்கிய கோஷ்டிக்குத் தலைமை வகித்து ஐக்கிய நாடுகளின் சபை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பாக்கியம் அவளுக்குக் கிட்டியது.

அந்தச் சபையின் தலைமைப் பதவி 1953-ம் வருஷம் விஜயலக்ஷ்மியை வந்து அடைந்தது. அறுபது நாடுகளிலிருந்து விஜயம் செய்யும் பிரதிநிதிகள் கொண்ட அந்தச்

சபையில், தலைமை பீடத்தில் அமர்ந்து மென்மையும் உறுதியும் கலந்த வகையில் ஆட்சி புரியும் விஜயலக்ஷ்மி யின் சாமர்த்தியத்தைக் கண்டு புகழாதவர்கள் இல்லை எனலாம்.

உலகில் வேறு எந்தப் பெண்மணிக்கும் கிட்டாத பெரும் பாக்கியம் தனக்கு வாய்த்திருப்பது, 'உலகம் இந்தியாவுக்கு அளித்துள்ள கௌரவமே ஆகும்' என்றுதான் அவள் கருதுகிறாள்.

'உலகிலே அச்சமும் அமைதியின்மையும் நீடிக் கின்றன. உலகத்தைக் கவிந்துள்ள பயம் நீங்குவதற்கு சமாதானம் பற்றிய உறுதி தேவை. எல்லா நாடுகளின் சுதந்திர உரிமையும் கௌரவிக்கப்பட வேண்டியது அவசியம்' என்று, ஐ.நா. சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும் கூறினாள்.

இந்தியாவின் சுதந்திரத்துக்காகவும் அமைதிக்காக வும் தீவிரமாக உழைத்து வந்த தனக்கு உலக சமா தானத்துக்குப் பாடுபடும் வாய்ப்பு கிட்டியதே என்று எண்ணி மகிழ்ந்தாள் அவள். அவளுக்கு லட்சியத்தில் உறுதியான நம்பிக்கை உண்டு.

ஆயினும், உலகத்தின் ஏகாதிபத்திய நாடுகளின், ஆசைகளையும் செயல்களையும் கவனிக்கும் போது, சிந்தனையாளர்களின் உள்ளத்திலே இயல்பாக எழக் கூடிய சந்தேகம் அவளுக்கும் உண்டாகாமல் இல்லை.

'ஐக்கிய நாடுகளின் சபை எந்த லட்சியத்தை அடையவேண்டும் என்று பாடுபடுகிறதோ, அத்தகைய

சுதந்திரமும் பரஸ்பர நம்பிக்கையும் நீடிக்கும் உன்னத நிலைமை, ஏற்பட்டு விடும் என்று நம்புவது கூடச் சரியில்லையோ என்ற கவலை எனக்குச் சிலசமயம் எழத்தான் செய்கிறது. அந்த லட்சியம் எளிதில் சித்தியாகி விடக் கூடிய அற்புத ஜாலம் இல்லையே என்ற எண்ணமும் என் நினைவில் எழும். நாம் அந்த மகோன்னத நிலையை எட்டிப் பிடித்துவிட வில்லை என்பது உண்மைதான். எனினும், அதை நோக்கி நாம் மெதுமெதுவாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்ற திருப்தி நமக்கு உண்டு.' இது விஜயலக்ஷ்மியின் கூற்று.

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் 1954-ம் வருஷம் மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்தாள். 'இப்பொழுதுதான் இலங்கைக்கு நான் முதல்முறையாகச் செல்கிறேன்' என்று அவள் சொன்னாள். மேல்நாடுகளிலும், அமெரிக்காவிலும் சுற்றுப் பிரயாணம் செய்து ஜனங்களோடு தொடர்பு கொண்ட அளவுக்கு தான் தென்னிந்தியாவில் யாத்திரை செய்யவில்லை என்பது அவளது அபிப்பிராயம். ஐக்கியநாடுகளின் சபைத் தலைமைப் பொறுப்பு தீர்ந்த பின்னர், இந்தியாவின் பல பகுதிகளிலும் சுற்றி மக்களின் நிலைமையை நன்கு உணரும் ஆசை தனக்கு இருக்கிறது என்று அவள் தெரிவித்தாள்.

தாய் நாட்டின் விடுதலைக்காகவும், உயர்வுக்காகவும் அமைதிக்காகவும் தீவிரமாக உழைத்துப் புகழ்பெற்ற விஜயலக்ஷ்மிக்கு இப்போது 53 வயதாகிறது. எனினும் இளமைத் தோற்றமும், பெண்மைப் பொலிவும், இனிமைக் கவர்ச்சியும் அவளிடம் நிறைந்து காணப்

படுகின்றன. மாறாத இளமை குடிகொண்டிருக்கிறது அவள் உள்ளத்திலே.

கவிக்குயில் சரோஜினி தேவியை உலகுக்கு அளித்த இந்தியா, கீர்த்திபெற்ற எத்தனையோ மாதர் திலகங்களை உலகத்திற்கு அறிமுகம் செய்த பாரதநாடு, அரசியல் மேதை அழகி விஜயலக்ஷ்மியையும் தந்துள்ளது. அதன் மூலம் அவளுக்குப் பெருமை அளித்துத் தானும் மாண்புற்றுத் திகழ்கிறது.

வாழ்க விஜயலக்ஷ்மி! உயர்க அவள் திறமை! அவள் லட்சியம் சிறப்புற்று வெற்றியுடன் விளங்கக் காலம் துணைபுரியும் என நம்புவோம்.

ராயன் அச்சகம், சென்னை-1.

படிக்க வேண்டிய

*சிறந்த நூல்*

# நம் நேரு

(வாழ்க்கை வரலாறு)

**வல்லிக்கண்ணன் எழுதியது**

இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய ஜவாஹர்லால் நேருவின் குடும்ப சரித்திரமும், நாட்டின் சுதந்திர வரலாறும் இதில் அழகாகவும் உணர்ச்சியுடனும் சொல்லப் பட்டிருக்கின்றன. ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய நல்ல புத்தகம் இது.

## விலை ரூபாய் ஒன்று

*இது* '**கலா மன்றம்**' *வெளியீடு*

## பிற நூல்

நம் நேரு 1 0 0

(வாழ்க்கை வரலாறு)

நேரு புத்தகசாலை,
125, செட்டியார் தெரு,
கொழும்பு.

*Jacket Printed at Vinodan Press, Madras-1.*